Registere as a News paper in S... பக்கங்கள்: 06 விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆு சித்திரைமீ 22 ஆம் உ சனிக்கிழமை (05-05-1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 8 ஓசை 76

## மகனையும், மருமகனையும் விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம்

(வவுனியா)

கைது செய்யப்பட்ட மகனும், மருமகனும் கொல்லப்பட்டுவிட்டனர் என்று இலங்கை இராணுவ அதிகாரியினால் கூறப்பட்டதையடுத்து, அவர்களை உயிருடன் தான் வைத்திருக்கிறீர்கள், உடனடியாக விடுதலை செய்யுங்கள் என்று கோரி செட்டிகுளம் பகுதி பெண்மணி ஒருவர் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகிறார்.

84 ஆம் ஆண்டு இலங்கை இராணுவப் படையினால் செட்டிகுளம் பகுதி சுற்றி வளைத்து, தேடுதல் மேற்கொள்ளப்பட்டபோது, மேற்படி பெண்மணியின் மகன், மருமகன் உட்பட 72 பேர் இப் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் அவ்வாண்டே வவுனியா இராணுவ முகாம் ஒன்றில் வைத்து படையினரால் கொல்லப்பட்டனர் என்று (6 ஆம் பக்கம் பார்க்க)

## நடைபாதை வியாபார நிலையம் 1000 ரூபா

(யாழ்ப்பாணம்)

பாதசாரிகளுக்கும் வாகனங்களுக்கும் இடைஞ்சல் விளைவிக்கின்றன என்ற காரணத்துக்காக பெரிய கடைப் பகுதியில் இருந்த நடை பாதைக் கடைகள் ஏற்கனவே அப்புறப்படுத்தப்பட்டன

நடைபாதைவியாபாரிகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு கஸ்தூரியார் வீதி வண்ணான் குளத்துக்கருகில் இவர்களுக்கு இடங்கள் ஒதுக்கி வழங்கப்பட்டன வழங்கப்பட்ட இந்த இடத்தை ரூபா 1000 வாங்கிக் கொண்டு சிலர் விற்று வருகிறார்களாம்



விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு நேற்று சாவகச்சேரியில் விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒரு பகுதியினர்.

தெமட்டக்கொடையில்

## கணவன் - மனைவி கொலைக்கு விஸா மோசடியே காரணமாம்

(கொழும்பு)

தெமட்டக்கொடை புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் நடைபாதையில் திங்களன்று இரவு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த இளம் தமிழ் தம்பதியினர் கனேடிய விஸா மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் என்று பொலிஸார் நம்புவதாக பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் அதிபர் இக்னேஷியஸ் கனகரெத்தினம் தெரிவித்தார்.

கணவன் மனைவியான வியமுத்து தவசெல்வராசாவும், கோமளவல்லியும் சுமார்பத்து வருடங்களுக்கு முன் புலம் பெயர்ந்து கனடாவுக்குச் சென்று, கனேடிய பிரஜா உரிமை பெற்று அங்கு வாழ்ந்து வந்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன் நாடு திரும்பி கொட்டாஞ்சேனையில் ஆட்டுப்பட்டித்தெருவில் டி ஜி லாஜ்ஜில் தங்கியிருந்தார்களாம்.

கூரிய ஆயுதத்தினால் கழுத்தில் குத்தியதால் மரணம் சம்பவித்தது என பிரேத பரிசோதனையின்போது தெரிய வந்தது.

இரண்டு மாதங்கள் இலங் (6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வம்சாவளியினரைத் திருப்பி அனுப்ப அனுமதியோம்

### ரெலோ காந்தா

(சென்னை)

இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளரைத் திருப்பி அனுப்ப நாம் அனுமதிக்கப்போவதில்லை என்று தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) அமைப்பாளர் காந்தா சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

இதேவேளை நாட்டில் எஞ்சியிருக்கும் இந்தியப் பிரசைகளை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள் தற்பொழுது நாட்டில் அமுலிருக்கும் சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும் என்று யாது (6 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தீர்ந்தாலே பாரிய அபிவிருத்தியில் அர்த்தம்!


## வாகனப் போக்குவரத்திற்கு கராஜ், மரக்காலை இடைஞ்சல்

- வி. பி. பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியில் அதிகரித்து வரும் வாகனப்போக்குவரத்துஒழுங்குகளுக்கு சில கராஜ் உரிமையாளர்களும், மரக்காலை உரிமையாளர்களும் இடையூறாக இருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து விதிகளை ஒழுங்கு செய்து போக்குவரத்துக்களை திறமையாக நடாத்திவரும் இந்த வேளையில் இந்த கராஜ் உரிமையாளர்கள் வீதியோரத்தில் கார்களை திருத்துவதிலும், மர உரிமையாளர்கள் மரங்களை (6 ஆம் பக்கம் பார்க்க)



Caption under the photo: இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் நோக்கோடு தமிழ்ப் போராளிகளுடன் ஜனாதிபதி பிரேமதாசா பேச்சுவார்த்தை நடத்தி எடுத்துவரும் முயற்சி பாராட்டுக்குரியது என்றும் ஜப்பான் பிரதமர் கைபூ கூறினார்.

# கொழும்பில் கைபூ விளக்கம்

## பிரேமாவின் பேச்சுவார்த்தை முயற்சிக்கு பாராட்டு

(கொழும்பு)

"இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாத வரை அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டால்தான் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும்''

இவ்வாறு இலங்கைக்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்ட ஜப்பானியப் பிரதமர் கைபூ நேற்றுக்காலை தமது விஜயத்தை முடித்துக்கொண்டு இந்தோனேசியத் தலைநகரான ஜகார்த்தாவுக்கு புறப்பட்டுச் செல்லுமுன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் முயற்சியில் ஜனாதிபதி பிரேமதாசா வெற்றி காணவேண்டும் என்று வாழ்த்திய ஜப்பான் பிரதமர் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை என்றார்.

மனித உரிமை மீறல் பிரச்சினை

இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றிக் கவலை தெரிவித்த ஜப்பான் பிரதமர் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் மனித உரிமை மீறல்கள் பற்றி ஆராய இங்கு நேரில் வரும் பொழுது அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும், மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

(6-ஆம் பக்கம் பார்க்க)

# தர்மமும், நியாயமும் எமது பக்கம் இருந்தால் வெற்றி நிச்சயம் - தினேஷ்

(யாழ்ப்பாணம்)

நாம் இந்திய இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டிருந்த சமயம் நாம் தர்மத்தையும் நியாயத்தையுமே எமது ஒரேகொள்கையாகக்கொண்டு போராடினோம். இவையிரண்டும்எமதுபக்கமிருந்தால்எமது லட்சியத்தில் நிட்சயமாக வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது ஆனால் மாற்று இயக்கத்தவர்களோ வெறும் பதவி நோக்கத்துக்காகவே இந்திய இராணுவத்தின் வளிகாட்டலின் கீழ் துப்பாக்கி ஏந்தினர்.

என தென்மராட்சிப் பிரதேச பொறுப்பாளர் தினேஷ் அவர்கள் நேற்று சாவகச்சேரி டிறீபேக் கல்லூரியில் நடைபெற்ற கைதிகள் விடுவிப்பின் போது பேசிஉள்ளார்

மேலும் திரு தினேஸ் அவர்கள் பேசும் பொழுது உங்கள் பிள்ளைகளை நீங்கள் எதிர் காலத்தில் ஒரு முழு மனிதராக நல்ல பிரஜையாக உருவாக்குவதற்கு நீங்கள் இனிமேல் மிக கவனமாக செயல்பட வேண்டும் கடந்த காலத்தில் உங்கள் பிள்ளைகள் எவ்வாறு இழிவாக நடத்தப்பட்டுள்ளார்கள் என்பதை வீடுசென்றதும் அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் இதிலிருந்து நீங்கள் நல்லதையும் தீயதையும்தெரிந்து கொள்வீர்கள் என்றார்

இதே கைதிகள் விடுவிப்பு கூட்டத்தில் விடுதலைப் புலி

(6ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் தடுத்துவைக்கப்பட்ட 100 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த மேலும் 100 பேர் நேற்று மாலை சாவகச்சேரி டிறீபேக் கல்லூரி ஒன்றுகூடல்மண்டபத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இக்கைதிகள் விடுவிப்பு சம்பவம் சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. நவரட்ணராசா, பிரஜைகள் விழிப்புக்குழுத்தலைவர் திரு. சோதிநாதன் ஆகியோர் உட்பட பல நூற்றுக்கணக்கான பெதுமக்கள் மத்தியில் விடுவிக்கப்பட்டனர். (லோ)

## ஓவியக் கண்காட்சி

இன்று காலை 9மணியிலிருந்து பிற்பகல் 4மணி வரை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ்.மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரால் ஓவியக் கண் காட்சி நடாத்தப்படும். இப்போட்டியில் பங்குபற்றி தெரிவு செய்யப்படும் ஓவியங்களுக்கு பரிசுகளும்,சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## விஞ்ஞானபீட பரீட்சை 8-ம்திகதிநடைபெறும

யாழ்.பல்கலைக்கழக1989ம் ஆண்டு 2-ம் வருட விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இன்று

(6ஆம் பக்சம் பார்க்க)



தடுத்து வைக்கப்பட்டவர்கள் சாவகச்சேரியில் நேற்று விடுதலை செய்யப்பட்டபோது அந் நிகழ்ச்சியில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேசும் அரசியல் பொறுப்பாளர் பாப்பாவும்.

# கோட்டை ரயில் நிலையத்தில் திருடர்கள் தொல்லை அதிகரிப்பு

கோட்டை ரயில் நிலையத்தில் மீண்டும் பிக்பொக்கற்காரரும் திருடரும் நடமாடத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் பதுளை போன்ற இடங்களுக்கு இரவு நேரம் ரயில் ஏற வரும் பயணிகளிடமே இவர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

ரயில் மேடைக்கு வரும் போது பயணிகள் அவசரப்பட்டு ஏறும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இவர்சுள் தமது தொழிலைச் செய்கின்றனர்,

சில தினங்களுக்கு முன்னர் இரு பெண்களின் தங்கச் சங்கிலிகள் இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் கொள்ளையர் ஆயுதங்களுடன்பிடிபட்டனர்

(பூநகரி)

சென்றபுதன்கிழமை அன்று இரவு 9-45 மணியளவில் பூநகரியிலுள்ள வேரவில் என்ற இடத்தில் இனம் தெரியாத நபர் மூவர் ஆயுதமுனையில் இதே இடத்தைச் சேர்ந்த மாரிமுத்து இரத்தினம் என்பவருடையவீட்டிலிருந்து பணத்தினையும் நகையினையும் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச்செல்லுகையில் பிடிபட்டுக் கொண்டார்கள். கொள்ளையிடப்பட்ட நகையினது பெறுமதி ஐம்பதாயிரம் ரூபாவாகும்.

இக்கொள்ளையர்கள் அயல் வீட்டான இரத்தினம் பாக்கியம் என்பவரின் வீட்டிலும் நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துள்ளனர். இக்கொள்ளையர்களிடமிருந்து ஒரு M70,இரண்டு கிறனைட் என்பன கைப்பற்றப்பட்டன.

# மட்டக்களப்பு கச்சேரியில் மோசடிகளைதடுக்கநடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனர்வாழ்வு நிவாரண கொடுப்பனவுகள் தொடர்பாக மோசடிகள் இடம் பெற்றுள்ளதை கண்டுபிடிப்பதற்காக செயலக கணக்காய்வாளர் பிரிவு, கணக்காய்வாளர் திணைக்கள அதிகாரிகள் கணக்காய்வு வேலைகளை தற்போது ஆரம்பித்துள்ளனர்.

ரூபா 4000 கொடுப்பனவுகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன.

பின்பு சில மாதங்களால் இடைநிறுத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது (37)

# யாழ். நகரில் எட்டாம் திகதி இரத்ததான தினம்

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் எட்டாம் திகதி சர்வதேச இரத்ததான தினமாக கொண்டாடப்படுகிறது.

சர்வதேச ரீதியாக உலக நாடுகள் அனைத்திலும் இத்தினம் கொண்டடாப்பட உள்ளதால் யாழ் மாவட்டத்திலும் பல இரத்ததான வைபவங்களும் நடைபெற உள்ளது.

சாதி, சமய வர்க்க வேறுபாடுகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டு மனித நேயத்தை எடுத்துக்காட்டும் ஒரே வளிமுறை இரத்த தானமேயாகும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு மனிதனும் இரத்ததானம் செய்வது அவர்களது உடலுக்குப் புதிய இரத்த உற்பத்தியை அதிகரிக்கிறது. இதில் எது

(6ஆம் பக்கம் பார்க்க)

## சனிக்கிழமைகளில் சர்வதேசபிரிவு திறப்பு

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இன்று முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணிமுதல் பகல் 1 மணிவரையும் சர்வதேசப் பிரிவு திறந்திருக்கும் என இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் – ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(B.825)

FOR SALE

Alsation pups Seven (7) weeks old wormed and weaned. Doberman Pincher X Ridge Back 6 month — Bantam Chicks 2, 1/2 mounths for Sale 249, Palaly Road, Kantharmadam, Jaffn

(R.450)

# இன்று மாமனிதர் மார்க்ஸ்சின் பிறந்ததினம்

ஒரு கோட்பாட்டாளன் புரட்சிவாதி, சிந்தனையாளன் வழிகாட்டி போன்ற பலபயனுள்ள அம்சங்களை உள்ளடக்கி உலகில் பிரபல்யமடைந்தவர் மார்க்ஸ் இந்த மாமனிதர் 1818 மே 5ஆம் நாள் ஜேர்மனியிலுள்ள பிரஷ்ய மாகாணத்தின் டிரியர் நகரில் பிறந்தார். சமூக நடைமுறைகளை ஒரு விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைக்குள் கொண்டு வந்தவர் என்ற வகையில் ஒரு மங்காத உயிர் வாழும் மனிதராகிவிட்டார்.

இளைஞரான மாக்ஸ் தனது பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கொண்டபின் இந்த உலகம் அதன் நடைமுறைகள் வாழ்வின் அர்த்தம் அந்த வாழ்வு எங்கிருந்து ஆரம்பித்து எதில்போய்முடிகிறது. போன்ற அடிப்படைக் கேள்விகளை எழுப்பி விடைகாண முயன்றார். இந்த மரபிலே தனக்கு முன்பு சிந்தித்த கிரேக்க சிந்தனையாளர்களையும் அவர்களது கருத்துக்களையும் மிக ஆழமாக படித்தார். அந்த அடிப்படையில் தனது அறிவியலை வளர்த்து துரதிருஷ்டியான ஓர் அகன்ற தளத்தில் ஒரு புதிய வடிவத்தில் மனிதனுடைய நடவடிக்கைகளை இணைத்தார் இயற்கையின் உயிரியல் வளர்ச்சி விதியினை டார்வின் கண்டு பிடித்ததைப்போல் மனிதவரலாற்றின் வளர்ச்சி விதியினை மாக்ஸ் கண்டுபிடித்தார்.

மாக்ஸ் தனது வாழ்நாளில் மூன்று முக்கிய நாடுகளில் வாழவேண்டியேற்பட்டது. அவ்வாறான மாற்றத்துக்குக் கூட அவரது புரட்சிகர கருத்துக்களேகாரணமாயமைந்தன அவர் பிறந்த நாடான ஜேர்மனி 19ஆம் நூற்றாண்டிலே தத்துவத்திற்கு பெயர்பெற்று

எல்லாளன்

ருந்தது. அடுத்து வாழ்ந்த பிரான்ஸ் பிரான்சியப் புரட்சியால் உள்வாங்கியிருந்த கருத்துக்களாலும் சமதர்மத் தன்மைகளாலும் மாக்கிற்கு வழிகாட்டியது. இறுதியாக வாழ்ந்த பிரித்தானியா அரசியற் பொருளாதாரம் என்ற முக்கிய சிந்தனையை அவருக்கு கொடுத்தது இந்தமூன்று தத்துவப் போக்குகளையும் தொடர்ந்து ஆராய்ந்து அவற்றிற்கு பூரணத்துவம்கொடுத்த மேதை என்ற வகையில் மாக்ஸ் என்ற பெயரைஇலகுவில் யாராலும் தொலைத்து விட முடியாது

மாக்ஸ்சின் சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது கெகரிய சிந்தனைதான் மாக்ஸ் தனது பங்களிப்புப் பற்றிக் கூறுமிடத்து;

''கெகர் என்பவரது இயங்கியலையும் பாயர்பாகின் பொருள் முதல் வாதத்தையும் இணைத்தது தான் எனது வேலை'' என கூறி மிக சாதாரணமாகவே தன்னைக் கடந்து விடுகிறார். பொருள் முதல்வாதம் இயங்கில் பொருள் முதல் வாதம் இயங்கிலர் வரலாற்றுப் பொருள் முதல் வாதம் அதிய மூன்று அம்சங்

கைகளின் சித்தாந்த நோக்கங்களை மட்டுமே ஆராய்ந்தன. அதைவிடுத்து இந்த நோக்கங்கள் தோன்றுவதற்கு காரணமாய் இருந்தவற்றைப் பரிசீலிக்கருல்லை. சமுதாய உறவு அமைப்பு முறையின் வளர்ச்சியை ஆளும் புறநிலை விதிகளைப் புரிந்து கொள்ள வில்லை. பொருளாதார உற்பத்தி அடைந்துள்ள வளர்ச்சி நிலையில் இந்த சமுதாய உறவுகளின் மூல வேர்கள் இருப்பதாக கண்டறிந்து கொள்ளவேயில்லை. ஆனால் மாக்ஸ் இவற்றையெல்லாம் பூரணத்துவப் படுத்தினார்.

அரசு ஆளுகினற ஆளப்படுகின்ற வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகள் அங்குள்ள குறைபாடான சூழ்நிலைகள்என்பவற்றைப் பற்றியெல்லாம் மாக்ஸ் தனது கருத்துக்களை முன்வைத்தார். ஏற்றத்தாழ்வுகளை வெறுத்தார்அவற்றைத்தகர்த்தெறிய முனைந்தார். அந்த வகையில்தான் மாக்ஸ் என்ற மனிதர் நசுக்கப்படும் மக்களுக்காககுரல்கொடுத்து அவர்களுக்காக கைகொடுத்துஅவர்களது வாழ்விற்கு ஒருபுதிய அர்த்தத்தையும் நம்பிக்கையையும் கொடுத்தார்.

ஜென்னி ஒரு தடவை தாய் வீட்டிற்குச் சென்றிருந்தார். அப்போது ஏற்பட்ட பதினைந்து நாள் பிரிவை மாக்ஸ் தனது இறுதிக்காலக் கட்டத்தில்கூட அனுபவித்து மனம் சலங்கினார். ஜென்னி இறந்த பின்பு சல்ஏங்கெலஸ் ஒருதடவைசொன்னார்''என்றுஜென்னிஇறந்தாளோ என்றே மாக்சும் இறந்துவிட்டார்'' என்று

வறுமையில் வாழ்ந்த மாக்ஸ் குடும்பத்தினர் தமது ஒரே மகள் வறுமையில் இறந்த போது அளவற்ற வேதனை அடைந்தனர். அப்போது ஜென்னி குறிப்பிட்டார். ''இந்தக் குழந்தை பிறக்கும்போது தொட்டில்லை'' இன்று அடக்கம் செய்வதற்குக்கூட வசதியற்ற நிலையில் வீட்டு முற்றத்திலேயே அக்குழந்தை அடக்கம் செய்யப்பட்டது. அந்த வேதனைனால் மாக்ஸ் துடித்

என பத்திரிகை நிருபர் ஒருவர் மாக்ஸை கேட்டபோது அதற்கு மாக்ஸ் அவ்வாறு ஒரு நிலையிருந்தால் காதல் என்ற ஒரு விடயம் அங்கு இருக்கக் கூடாது என்றார். ஆச்சரியத்துடன் மீண்டும் வினாவப்பட்டபோது காதல் என்ற ஒன்றுக்காக ஜென்னி பட்ட துயரங்களை நான் என்றும் மறக்கமாட்டேன். எனவேதனையுடன் குறிப்பிட்டார். ஜென்னியில்லையேல் மூலதனமும் இல்லை.என்ற கருத்து நியாயபூர்வமானதே. அதற்காகத்தான் அந்த மகோன்னதமான படப்பை சமர்ப்பணம் பெறக்கூடிய தகுதியை ஜென்னி பெற்றார்.

மாக்ஸ் தனது கருத்தைத் அணித்திரமாக ஒப்புவிக்கும் போது காலம் சூழல் தேவைகளுக்கேற்ப பரிசீலனைக்குட் படுத்த வேண்டுமென்றார். இந்த அணுகுமுறையானது: மாக்சியத்தை வளர்த்துச் செல்லுமே தவிர தொலைந்து விடாது.

உலக மக்களுக்காக வாழ்க்கையின் சாராம்சத்தை யதார்த்த பூர்வமாக நடந்துவதற்காக சிந்தித்த அந்த மாமனிதர் 1883 மார்ச் 14 ஆம் திகதி சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறே வெற்றுடலானார். இதுபற்றி ஏங்கெல்ஸ் மாக்ஸ் மாக்சின் மூளை சிந்திப்பதை நிறுத்தி விட்டது. என கலாபூர்வமாக எடுத்துக்காட்டினார்.

இங்கிலாந்தில் ஹைகெட் இடுகாட்டில் இருக்கும் மாக்சின் சமாதி சதா வேண்டிநிற்பது உலக மக்களிடமிருந்து தனது ஆத்மா சாந்திக்கான பிரார்த்தனை அல்ல: ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திரத்தையே.

# உள்ளூராட்சி நிர்வாகத்தில் பட்டதாரி பின் படிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபை செயலாளர் திரு. இராஜ. தணிகாசலம் உள்ளூராட்சி நிர்வாகத்தில் பட்டதாரி பின் படிப்பில் சித்தியடைந்து ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு பட்டப்படிப்பிற்குச் செல்ல உள்ளார்.

எதிர்வரும் ஏழாந் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு இவர் மேற்படி பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்வார்.

வடகிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி நிர்வாக பட்டதாரிப் பின் படிப்பில் சித்தியடைந்தவர் இவர் ஒருவர் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டப்படிப்பையடுத்து மீண்டும் இவா வவுனியா நகரசபையின் செயலாளராக பணியாற்றுவார்.

குறிப்பிட்ட ஆறு மாதங்களுக்கு தற்காலிகமாய் ஒருவர் செயலாளர் பணியை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# கிளிநொச்சி மாவட்டத்தை வளமாக்க நிதியுதவி போதாது

## கிளிநொச்சி அரசாங்க அதிபர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது சிரமதான சபை கண்டாவளை உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புளியம் பொக்கணையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க.மாணிக்கவாசகரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. சதா. தனபாலசிங்கம் தலைமையில்

கிடைக்கும் நிதி மிகவும் குறைவாகவே உள்ளது. எமக்குக் கிடைக்கும் நிதியைக்கொண்டு எமது தேவைகளில் நூறிடு ஒரு பங்கைக் கூடச் செய்து முடிக்க முடியாது.

எமது மாவட்டத்தை வளம் படுத்த வேண்டியது எமது ஒவ்வொருடைய கடமையுமாகும். எமக்குக் கிடைக்கும் அரசாங்கத்தின் நிதியோடு, எமது உடல் உழைப்பில்

யாழ். இலங்கை வங்கி

சர்வதேசப்பிரிவின் விசேட சேவை

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளை தனது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி, அதன் சர்வதேசப் பிரிவை பிரதி சனிக்கிழமை தோறும் காலை 9-00 மணி முதல் -பி. ப. 1-00 வரை வாடிக்கையாளருடனான வியாபார அலுவல்களுக்காக திறந்திருக்கும்.

வங்கி வழங்கும் சேவைகள்

1. வெளிநாட்டுக் காசோலைகள், உண்டியல்கள் போன்றவற்றுக்குக் கவர்ச்சிகரமான மாற்று வீதத்தில் பணம் வழங்குதல்.
2. வதிவோரல்லாதோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் (என்.ஆர்.எல்.சி. க/கு) பணம் வழங்கலும், வைப்பிடுதலும்.
3. சேமிப்புச் சான்றிதழ்களை, விசேட வட்டி வீதத்தில் வழங்குதல்.
4. நிலையான வைப்புக் கணக்குகளை ஆரம்பித்தல்.

யாழ்நகரில் இன்றைய சினிமா

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30, 6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

ராஜா (யாழ்)
150ஆவது நாளைநோக்கி வெற்றிநடை போடுகிறது
தினசரி 4.00 6 .45 9.30
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30 2.50 6.30 10.30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)
திங்கள் முதல்
மூன்றுமுடிச்சு

மனோகரா - (யாழ்)
தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-45, 700 & 945
DAVID WARBECK IN THE HUNTERS OF THE GOLDEN COBRA

வெலிங்டன் யாழ்
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30

5. சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகளை ஆரம பித்தல்.
6, எல்லா கணக்குகளிலும் பணம் வைப்புச் செய்தல்.
7. கண்டதும் கொடுப்பனவுக் கட்டளை வழங்குதல்.

வாடிக்கையாளர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வசதியாகவும், துரிதமாகவும் தங்கள் கொடுக்கல், வாங்கல்களைச் செய்து கொள்ளலாம்.

இலங்கை வங்கி, பிரதான முகாமையாளர்
யாழ்ப்பாணம். (B/864)

---

யாழ்ப்பாணம்
ப. நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது

## கட்டிடத் திருத்த வேலைகளுக்கான கூறு விலை கோரல்

யாழ்ப்பாணம், பெரியகடை, 127, காங்கேசன் துறை வீதியில் அமைந்திருக்கும் எமது சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டிடத்திலுள்ள கீழ்க்காண் திருத்த வேலைகளைச் செய்து முடிப்பதற்குத் தகுதி வாய்ந்த கேள்விக்காரரிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1· மேசன் வேலை
2. தச்சு வேலை
3· வர்ணம் பூசுதல்
4. வாணிஸ் பூசுதல்
5. மின் இணைப்பு
6. நீர் விநியோகப் பொருத்துக்கள்

விண்ணப் படிவங்களை ரூபா 25/- மீளளிக்கக் கூடிய ரூபா 50/- முற்பணமாகக் காரியாலயத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்விகள் சீல் செய்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விக் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ். ப. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலயக் கட்டிடத் திருத்தம் செய்வதற்கான கூறு விலை'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 15. 5. 90 நண்பகல் 12. 00 மணிக்கு முன்பதாகும்.

குறிப்பு:
மேலதிக விபரங்கட்கு பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் அல்லாத ஏனையவை நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்,
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
04. 05. 1990.

(B/615)

---

களையும் இணைத்ததுதான் மாக்சியம்.

மாக்ஸ் எவ்வாறு ஏனைய சிந்தனையாளர்களிடமிருந்து வேறுபடுகிறார் என நோக்கின் அவருக்கு முந்திய வரலாற்றுத்தத்துவங்கள் மிகச் சிறந்த நிலையிற்கூட மனிதர்களின் வரலாற்று நடவடிக்

த்தாக ஒரு நண்பர் குறிப்பிடும்போது அன்றிரவே மாக்சின் தலை நரைத்துவிட்டது. என்றார். இந்த துயரங்களில் இருந்துகொண்டுதான் மாக்ஸ் உலக மக்களின் சுபீட்சத்திற்காக சிந்தித்தார்.

நீங்கள் மறுபிறவி எடுத்தால் எதை விரும்புவீர்கள்

நடைபெற்ற இவ் வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு மாணிக்கவாசகர் பேசுகையில் கூறியதாவது:-

வடபகுதிக்கே உணவை வழங்குகின்ற இம் மாவட்டத்


# டிப்ளோமா மனைப் பொருளியல்

# DIPLOMA IN HOME ECONOMICS

- கேக் ஐசிங்
- சமையற் கலை:
  (கீழைத்தேய மேலைத்தேய உணவு, சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், புடிங்வகைகள் தயாரித்தல்)
- தையற் கலை:
  (சிறுவர் சிறுமியர் முதல் பெரியவர்கள் மகளிருக்கான உடைகள் தயாரித்தல்)
- கூந்தல் அலங்காரம்:
  (கொண்டைகள் போடுதல், மணப்பெண் அலங்காரம், விக் தயாரித்தல்)
- கை வேலை:
  (மக்றமி, நூல்வேலை, வைக்கோல் வேலை பொம்மைகள் தயாரித்தல்)
- பூ வேலை
  (கடதாசியிலும், துணிகளிலும், மலர்களை உருவாக்குதல்)
- வர்ணம் தீட்டுதல்:
  (கண்ணாடிகளிலும், சாடிகளிலும், துணிகளிலும், வர்ணம் தீட்டுதல்)
- வரைதல் (ART)
- கோலங்கள் போடுதல்

☐ பயிற்சிக் காலம்: 6 மாதங்கள்
☐ பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
☐ பயிற்சிகள் யாவும் திங்கள், புதன் ஆகிய தினங்களில் காலை 8-30 மணி முதல் 1-30 மணி வரை நடைபெறும்.

**புதிய வகுப்புகள் ஆரம்பம் 7-5-90**

☐ தொழில் புரியும் பெண்களின் வசதிக்காக ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை பயிற்சிகள் நடைபெறும்.

விபரங்கட்கு:-

**கலாலயா**
(நுண்கலை, மனையியல் நிறுவனம்)
பதிவு இல. 16020
விக்டோரியா வீதி, யாழ்நகர்.

(B/ 613)


எமது உடல் உழைப்பில் ஒருபகுதியையும் கொண்டு இந்த மண்ணை வழம்படுத்துவோம்.

போதிய வீதிகள் இல்லாததனால் கிராமங்கள் பல துண்டாடப்பட்டுள்ளன. மக்கள் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ள புதியவீதிகளை அமைப்பதன் மூலம் துண்டாடப்பட்டுள்ள கிராமங்களை இணைக்கவும் துண்டிக்கப் பட்டுள்ள மக்கள் தொடர்வுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

நாம் இங்கு மூன்று மைல் தூரத்திற்கு ஒரு புதிய பாதையை உருவாக்குவதன் மூலம் மயில்வாகன புரத்துக்கு இலகுவாகச் செல்ல முடியும்.

ஆதலால் இன்று இங்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் புதிய சிரமதான சபை மேற்படி வீதிச் சிரமதான வேலையை உடனடியாக ஆரம்பித்துச் செய்து முடிக்க வேண்டும்.

இப் பிரிவுக்கு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப் பட்டுள்ள சதா. தனபாலசிங்கம் மிகவும் திறமைமிக்கவர் அவருக்கு உதவியாக புளியம்பொக்கனை கிராமசேவையாளர் சின்னத்தம்பி, பிரமந்தனாறு கிராம சேவையாளர் நாகேந்திரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இருக்கிறார்கள்.

இவர்களின் ஒத்துழைப்புடன் கிராம மக்கள் வீதியை நல்லமுறையில்செய்துமுடித்து மாவட்டத்தின் முன்னணியில் திகழ வேண்டும் என்றார்.

## நானாட்டானில் மேதினம்

(மன்னார்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஆதரவுடன் நானாட்டான் சயிமன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மாபெரும் மேதின விழாவை கடந்த செவ்வாய்க் கிழமை அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடியது. இம் மேதின விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.


தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30

**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45,
சனி ஞாயிறு காலை10-30 2-30 6-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
**16 வயதிலே**
(புதிய பிரதி)
(B/860)

**ஹரன் - யாழ்**
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
**"நாயகன்"**
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 887


## உபதபால் அதிபர் பதவிக்குவிண்ணப்பம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை உப தபால் அலுவலக, உபதபால் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20ஆம்திகதி வெள்ளிக்கிழமை வர்த்தகமானியில் மே மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை தபால் அத்தியட்சகர் திணைக்களத்தில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

# நேபாளத்தில் பத்திரிகைகளுக்கு பூரண சுதந்திரம்

## புதிய பிரதமர் உறுதி

(காட்மண்டு)

நேபாள நாட்டில் புதிய யாப்பில் பேச்சு, பிரசுரச் சுதந்திரங்களுக்குப் போதிய பாதுகாப்பளிக்கப்படவுள்ளதாகச் சென்ற புதனன்று நேபாளப் பிரதமர் கிருஷ்ணா பிரசாத் பட்டாராய் தெரிவித்தார்.

பலகட்சி ஜனநாயக ஆட்சி முறை ஒன்றை நேபாளத்தில் ஏற்படுத்தும்படி ஜனநாயகத்துக்கான இயக்கம் நேபாள மன்னனுடன்போராடிவெற்றியீட்டும் வரை பத்திரிகைகள் அரசாங்கத்தின் கடுமையான கட்டுப்பாட்டுக்குக் கீழ் வெளிவந்தன.

பத்திரிகைகளுக்கு வழங்கப்படும் சுதந்திரம் யாப்பில் இடத்தைப் பெற்றிருந்தால் தான் நிர்வாக நடைமுறையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது என்று பிரதமர் பட்டாராய் பத்திரிகையாளர் கூட்டமொன்றில் தெரிவித்தார்.

பல கட்சி ஆட்சி முறை நேபாளத்தில் ஏற்பட வேண்டும் என்று போராடிய 36 பத்திரிகையாளர் சிறைவைக்கப்பட்டும் பின்னர் விடுவிக்கப்பட்ட சமயம் பத்திரிகையாளர் பலர் கூடி நின்றார்கள். பெப்ரவரி நடுப்பகுதியில் ஆரம்பித்த 7 வாரப் போராட்டம் 29 வருடங்களாக நேபாளத்தில் நிலவி வந்த கட்சிகளுக்கெதிரான தடை நீக்கப்பட்டதும் வாபஸ் பெறப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன் இடைக்கால அரசு நிறுவப்பட்டது. முதல் 8, 000 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேபாளகாங்கிரஸ் கட்சியின் பதில் தலைவரும் பிரதமருமான கிருஷ்ணா பிரசாத் பட்டாராய் கருத்துத் தெரிவிக்கையில் புதிய அரசாங்கத்தைப் பலப்படுத்த உதவும்படி பத்திரிகையாளரைக் கேட்டுக் கொண்டார்.

கம்யூனிஸ்ட் குழுக்கள் அங்கம் வகிக்கும் பட்டராயின் இடைக்கால அரசு தேர்தல் தொகுதிகளை மாற்றியமைக்கவும், 18 வயதுக்கு மேலானவர்களுக்கு வாக்குரிமை வழங்கவும், முடியாட்சியை யாப்புகமைந்ததாக மாற்றவும் திட்டமிட்டுள்ளது.

ஒரு வருடகாலமாக இந்தியாவுடன் இருந்து வரும் வியாபாரம் தொடர்பான சிக்கல் விரைவில் தீர்வதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் பட்ராய் தெரிவித்தார்.

## புது அமைச்சர்கள் தெரிவு

(டாக்கா)

பங்களாதேஷ் அமைச்சரவையில் "புதிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் முகமது எர்ஷாத் நான்கு புதிய அமைச்சர்களை நியமனம் செய்துள்ளார். இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்ற நீதிபதியாவர்.

## டோக்கியோவில் 30 கார்கள் தீக்கிரை

(டோக்கியோ)

இடதுசாரித் தீவிரவாதிகள் என்று கருதப்படுபவர்கள் நேற்று முன் தினம் டோக்கியோ விமான நிலையத்துக் அருகாமையில் நிறுத்தி வைத்திருந்த கார்களின் ரயர்களுக்குத் தீ வைத்துள்ளனர். இதனால் 30 கார்கள் எரிந்து விட்டதாக டோக்கியோப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கார்கள், பொன் வார விடுமுறையின் போது விமான மார்க்கமாக வெளியூர் சென்று திரும்புபவர்கள் நிறுத்தி வைத்து விட்டுச் சென்ற கார்களாம்.

## வவுனியா நகரசபைக்கு வீதி புனரமைக்க 16 லட்சம்

(வவுனியா)

வவுனியா நகரசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள, சீரழிந்து காணப்படும் வீதிகளை புனர்நிர்மாணம் செய்ய வடக்கு – கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு-புனர் நிர்மாண அமைச்சினால், மேற்படி நகரசபைக்கு பதினாறு இலட்சம் ரூபா அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சீரழிந்துள்ள வீதிகளை புனர்நிர்மாணம் செய்யும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக வவுனியா நகரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்டார வீதி, பூந்தோட்டம்-பெரியார் குளம்வீதி, குருமன்காடு-தாண்டிக்குளம் வீதி, சூசைப்பிள்ளையார் குளம் சுடலை வீதி போன்ற வீதிகள் திருத்தப்பட உள்ள வீதிகளில் முக்கியமானவை என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மிகவிரைவில் நகரசபை நிர்வாகத்திற்குட்பட்ட வீதிகளில் காணப்படும் மின் கம்பங்களுக்கு 'பல்புகள்' பொருத்தப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பூந்தோட்டம் வீதியில் மின் கம்பங்கள் இருந்தும், இரவு மின்விளக்குகள் எரியவில்லை என்று ஈழநாதம் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (தி)

## பாகிஸ்தான் யோசனையை இந்தியா நிராகரிப்பு!

(டில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநில நிலை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தானிய பிரதம மந்திரி பெனாசிர் பூட்டோ முன்வைத்த யோசனையை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ. கே. குஜரால் நிராகரித்துள்ளார்.

இதுபற்றிக் கருத்துத்தெரிவித்த ஐ. கே. குஜரால், பாகிஸ்தான் விதித்த நிபந்தனைகளை இந்தியா ஏற்கனவே நிராகரித்து வந்தது என்றும், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தாம் தயார் என்றும் அவர் கூறினார். இதற்கு முன்னதாக பாகிஸ்தான் பிரதம மந்திரி பெனாசிர் பூட்டோ ஐக்கிய நாடுகள் தாபனம் கூறிய கருத்து வாக்கெடுப்பு, சிம்லா ஒப்பந்த விதிகளுக்கு அமைய பேச்சுவார்த்தை நடத்தலாம் எனக் கூறியது.

அதேவேளை இந்தியப் பிரதம மந்திரி வி.பி. சிங் பாகிஸ்தானின் எந்தவொரு அச்சுறுத்தல் நடவடிக்கைகளும் முறியடிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் உட்பட எல்லா அயல் நாடுகளுடனும் இந்தியா நட்புறவுகளையே வைத்திருக்க விரும்புவதாக அவர் மேலும் கூறினார்.

## ஏ 320 ரக விமானங்கள் பாதுகாப்பு உறுதிபடுத்தும் வரை பாவனை நிறுத்தம்

(டில்லி)

இந்தியாவில் 320 ரக எயர் பஸ் விமானம் குறித்த பாதுகாப்பு அம்சங்கள் அனைத்தும் திருப்தி அளிக்கும் வரை அவற்றை பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுத்த முடியாது என இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் பெங்களூரில் நடந்த இவ்விமான விபத்தில் 90பயணிகள் உயிர் இழந்தமை குறிப்பிடத்தக்கது. இதை அடுத்து ஏ 320 ரக எயர் பஸ்கள் பதினான்கும் சேவையில் இருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆரிப் முகமதுகான் அறிவித்திருந்தார்.

அதன் பின்னர் இப்போது அவ்விமானங்கள் பாதுகாப்புக் குறித்து திருப்தி அளிக்கும் வரை சேவையில் ஈடுபடுத்தப் போவதில்லை என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது. இது குறித்து விசாரணை மேற்கொண்டு வரும் மத்திய புலனாய்வுத்துறை (சி.பி.ஐ) உண்மை விபரங்கள் அனைத்தையும் விரைவில் சமர்ப்பிக்கும் என்று ஆரிப் முகமதுகான் கூறினார்.

இதே வேளை மற்றுமோர் முக்கிய பிரச்சினையாக கூறப்படும் போபர்ஸ் தேசிய கணக்கு தணிக்கை பீரோவின் ரகசிய அறிக்கையை சுவீடிஷ் அரசு விரைவில் இந்திய அரசிடம் ஒப்படைக்கும் என சுவிஸ்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் அனித்தா கிரேடே தெரிவித்தார்.

சுவீடிஷ் பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கு இணங்கவே இந்தியாவிற்கு இவ் அறிக்கையை சுவீடிஷ் அரசு கொடுக்கிறது என அவர் கூறினர்.

## அம்பாறை மாவட்டத்தில் அடைவு நகைகள் மீளளிப்பு

(அம்பாறை)

சம்மாந்துறை, திருக்கோவில் மக்கள் வங்கிக் கிளைகளிலும், கல்முனை நிந்தாவூர், சாய்ந்தமருது ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் வைக்கப்பட்ட அடைவு நகைகள் நேற்றிலிருந்து மீளளிக்கப்படவுள்ளன.

கிராமிய வங்கிகளான கல்முனை, நிந்தாவூர், சாய்ந்தமருது ஆகியவற்றில் நேற்றும் 7 ஆம். 8 ஆம் திகதிகளிலும் சம்மாந்துறை மக்கள் வங்கியில் நேற்றும் 7 ஆம், 8 ஆம் திகதிகளிலும், திருக்கோவில் மக்கள் வங்கிக் கிளையில் 7 ஆம், 8 ஆம் திகதிகளிலும் மீளளிக்கப்படவுள்ளன.

## ஆலயங்களில் மிருகபலி தடைப்பட்டது

இதுவரை ஆடு, கோழி பலியிடப்பட்டுவந்த உரும்பிராய் மடத்தடி வயிரவர் கோவிலில் இவ் வருடம் விடுதலைப் புலிகளின் தலையீட்டால் மிருகபலி நிறுத்திவைக்கப்பட்டது.

சமய அனுட்டானங்களுக்கு மாறாக இது காலவரை நடைபெற்றுவந்த அந்த அதர்மச் செயல் நிறுத்திவைக்கப்பட்டதை சைவ அனுட்டானங்களைப் பேணிக்காக்கும் சமய நிறுவனங்களும், பக்தர்களும் பாராட்டுகின்றனர்.

## தமிழில்விண்ணப்பப்படிவங்கள் தமிழ் ஆசிரியர்களுக்கு தேவை

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் மாகாண சேவையிலா அல்லது மத்திய அரசின் சேவையிலா சேவை புரிய விரும்புகிறார்கள் எனக் கோரும் விண்ணப்பபடிவங்கள் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டதற்கு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த.மகாசிவம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தப் படிவங்களை நிரப்பாது மீண்டும் கல்விப்பணிமனைகளுக்கே திருப்பி அனுப்பலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழில் இப்படி வந்தினைத் தந்துதவுமாறு ஆசிரியர்கள கல்வித் திணைக்களத்தைத் கோருமாறும் அவர் கூறியுள்ளார்.

## ஆலய வழிபடுநர் மகாசபை

(நயினாதீவு)

நயினாதீவு தம்பகைப்பதி

## படகு நீரில் மூழ்கி 10 பேர் உயிரிழப்பு

(ஒக்லண்ட்)

நியூசிலாந்தில் தென் கொரிய படகொன்று நீரில் மூழ்கியது இந்த விபத்தில் பத்துப் பேர் உயிர் இழந்துள்ளனர்,

மேலும் நான்கு பேரைத் தேடி மீட்புப் படை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர் தென் கொரிய மீன் பிடிப்படகொன்றேநீரில் மூழ்கியது.

கடும்புயல் வீசிய வேளையில் படகோட்டிகள் பலர் ஆழ்ந்த நித்திரையில் இருந்ததாக அறி

## அணு ஆயுதத்தை அகற்ற

## நயினாதீவுக்கான படகுசேவை ஆரம்பிக்கப்படல் வேண்டும்

(புங்குடுதீவு)

அடுத்தமாதம் ஆரம்பமாக இருக்கும் நயினாதீவு அருள் மிகு நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவத்தின் போதாவது புங்குடுதீவு இறுப்பிட்டி துறைக்கும் நயினாதீவிற்கும் இடையிலான படகுசேவை

பாகங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் நயினாதீவிற்கு வருகை தருவதால் குறிகாட்டுவான் துறைமுகத்திலிருந்து மட்டும் படகு சேவை மேற்கொள்ளப்படும் போது பெரும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீவீரபத்திர சுவாமி ஆலய வழிபடுநர் மகாசபைக்கூட்டம் 29ஆம் திகதி நடைபெற்றது.

அதில் புதிய தர்மபரிபாலன சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தர்மபரிபாலன சபைத் தலைவர் திரு.க. புவனேஸ்வரன் செயலாளர்திரு.இ.கிருஷ்ணன், பொருளாளர்திரு.தி.சு. நடராசன் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் மேலும்12 தர்மபரிபாலன சபை உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித்அத்துலத்முதலி, கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி புலேந்திரன், மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் மகஜர் ஒன்றை திரு. மகாசிவம்அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் ஆசிரியர்களுக்கு தமிழில் இந்தப்படிவங்கள் கிடைக்க ஆவனசெய்யுமாறும் தமிழ் ஆசிரியர்கள் ஆங்கிலத்தில் அந்தப்படிவத்தைநிரப்பி அனுப்ப மாட்டார்கள்எனவும் அந்த மகஜரில் தெரிவித்துள்ளார்.

## சோவியத்துடன் பேச வேண்டும்

**- ஜேம்ஸ் பேகர்**

(பிரஸஸ்)

ஐரோப்பாவில் உள்ள அணுவாயுத ஏவுகணைகள் அனைத்தையும் அகற்றுவது குறித்து சோவியத் அரசுடன் நேட்டோ கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேகர் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமையன்று பிரஸஸ் நகரில் நடைபெற்ற நேட்டோ வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜேர்மனி இரண்டும் ஒன்றுபட்டால் உருவாகக் கூடிய மேற்குலக கூட்டணி குறித்தும் நேட்டோ அணி வெளியுறவு அமைச்சர்கள் விவாதித்தார்கள்,

இதற்கிடையில் நேட்டோ கூட்டணியை ஒட்டி மறு பரிசீலனை செய்ய நேட்டோ மகாநாட்டை வரும் யூன், யூலை மாதங்களில் கூட்ட இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் வியாழன் அறிவித்தார்.

மேலும் இவர் குறிப்பிடுகையில் நேட்டோ அமைப்பானது இன்றியமையாதது என்றும், ஐரோப்பாவில் ஏற்பட்ட அண்மைக்கால அரசியல் மாற்றங்களினால் அணு ஆயுதங்கள் தேவை இல்லை என்றும் கூறினார்.

விக்கப்படுகிறது படகில் 17 பேர் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

## இராஜகோபுர வேலைகள்

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஆலயமான பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலய இராஜகோபுரநிர்மாண வேலைகள் நடை பெற்றுவருகின்றன.

இவ் இராஜ கோபுர வேலைகள் மிகத்துரிதமாக இடம் பெற்று வெகு விரைவில் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஆலய உற்சவ காலங்களில் நாட்டின் பல

இக் கஷ்டங்களை நீக்கும் பொருட்டே இறுப்பிட்டி துறையிலிருந்தும் படகுசேவை மேற்கொள்ளப்பட வேண்டும் என மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர். (22)

## தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அபிவிருத்தி பற்றிய மகாநாடு

தமிழீழத்தில் அபிவிருத்தி தொடர்பான மகாநாடு ஒன்றை நடத்துவதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது இந்நிறுவனம் இம் மகாநாட்டிற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து அறிஞர்களின் யதார்த்த பூர்வமான ஆக்கங்களை கோரியுள்ளது.

பௌதீக அமைப்பு - அதன் வகைகள், காலநிலையும் - வானிலையும், நீர் வளங்களும் அபிவிருத்தியும், மண் வளங்களும் பாதுகாத்தலும், விவசாயத்திட்டங்கள் விருத்திகள், பயிர்ச் செய்கை முறைகளும் பரம்பல் வேறுபாடுகளும், விவசாயத்தை ஊக்குவிக்கும் நிறுவனங்களின் வளர்ச்சி, விவசாய விருத்தியில் வரண்ட பிரதேசங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், விவசாயத்திற்கு அளவுக்கு அதிகமான நீரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகள், கிருமிநாசினி, உரப்பாவனைப் பிரயோகத்தால் ஏற்படும் விளைவுகள், மண்ணின் சூழலுக்கு ஏற்ற புதிய பயிரினங்களின் அறிமுகம், விருத்திகள், பனம்பொருள் அபிவிருத்தி, உணவு பதனிடல் - புதிய தொழில் வாய்ப்புக்கள், மீன்பிடிக் கைத்தொழில், கரையோரப் பகுதிகளின் சூழல் நிலைமைகள், தமிழீழத்தின் சாலை விஸ்தரிப்பும் அபிவிருத்யில் அதன் பங்கும் மாற்றுச் சக்தி வளங்கள் குடாநாட்டின் குடிப்பரம்பலை ஏனைய தமிழ்ப் பகுதிகளிற்கு நகர்த்தல், விலங்கு வேளாண்மையில் புதிய யுக்திகள், நகர நிர்மாணம், பின்தங்கிய கிராமங்களின் வங்கிச் சேவை, மீன் வளர்ப்பும் பதவிடலும், காட்டு வளத்தைப் பேணலும் பாதுகாத்தலும், சூழற் பிரச்சினைகளும் மக்களின் பங்களிப்பும், புதிய பொருளாதார அபிவிருத்தி உபாயங்கள், வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்கான சிறு கைத்தொழில் உபாயங்கள், கிராமிய அபிவிருத்திக்கான திட்டங்கள், கனிப் பொருள் வளங்களின் பரம்பலின் முக்கியத்துவம், மனிதவளங்களும் பயன்பாடும், கரையோரப்பகுதிகளின் அமைப்பும் வளங்களும், கரையோர நகரங்களின் வளர்ச்சியும், விருத்தியும், உல்லாசப் பயணக் கைத்தொழில், கைத்தொழில் விருத்திகள், போக்குவரத்து அமைப்பும் வசதிகளும், சுகாதார நிலையங்களின் பரம்பலும் சேவைகளும், நகர வளர்ச்சியும், பொருளாதார விருத்தியில் பெண்கள், சந்தைகளின் பரம்பல், நிலப்பயன்பாடு, பாதுகாப்பு முறைகள், மண்வளம் பேணல், தமிழீழத்தின்சக்தித் தேவை ஆகிய தலைப்புகளில் சமர்ப்பிக்கலாம் என இவ் ஆய்வு நிறுவனம்தெரிவித்துள்ளது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் ஆய்வுக் கட்டுரைகளை திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள தமது அலுவலகத்திறகு அனுப்பலாம் எனவும் தெரிவித்துள்ளது.

### பட்டப்படிப்புக்கள் கல்லூரி ஆதரவிலான மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின்

## முதலாவது போட்டியில் விரிவுரையாளர் வெற்றி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், கல்வி சாரா ஊழியர்களுக்குமிடையே மென்பந்து கிரிக்செட் போட்டித்தொடர் ஒன்று நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இத் தொடரில் ஐந்து போட்டிகள் நடைபெற உள்ளன. ஒவ்வொன்றும் 20 ஓவர்களைக் கொண்ட போட்டியாகும்.

இப்போட்டித் தொடரில் வெற்றி பெறும் அணிக்கு சுற்றுக் கேடயம் வழங்சப்படவுள்ளது. இது தவிர ஒவ்வொரு போட்டியிலும் சிறந்த ஆட்டக்காரருக்கும், போட்டித் தொடரில் சிறந்த ஆட்டக்காரருக்கும் வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன. சுற்றுக்கேடயத்தையும், வெற்றிக் கிண்ணங்களையும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புக்கள் கல்லூரி இயக்குனர் திரு. இரா. சத்தீஸ்வரன் அவர்கள் அன்பளிப்பு செய்யவுள்ளார்.

### முதலாவது போட்டி

இப்போட்டித் தொடரில் முதலாவது போட்டி கடந்த வியாழக்கிழமை பல்கலைக்சழக மைதானத்தில் நடைபெற்றபோது விரிவுரையாளர்கள் மிக இலகுவாக 63 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். போட்டி காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்டமையால் போட்டி 15 ஓவர்களைக் கொண்டதாக குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விரிவுரையாளர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட 15 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றனர். கிருபாகரன் 21 ஓட்டங்களையும் முரளீதரன் 17 ஓட்டங்களையும் அருள்வேல், பாலேந்திரா ஆகியோர் தலா 10 ஓட்டங்களையும் பெற்றனர். தில்லைநாதன் 2 விக்கெட்டுக்களையும், டேவிட், அருள் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்வி சாரா ஊழியர்கள் விரிவுரையாளர்களின் சிறப்பான பந்து வீச்சுக்கும், பந்து தடுப்புக்கும் ஈடு கொடுக்க முடியாமல் 6.4 ஓவரில் சகலவிக்கெட்டுக்களையும் இழந்து 15 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். பாலேந்திரா 5 விக்கெட்டுகளையும், பார்த்திபன் 4 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

இத்தொடரின் இரண்டாவது போட்டி வெள்ளிக்கிழமை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பிள்ளைகள் கல்விகற்கும் திறமைஇருந்தும் கூலிவேலைக்கு அனுப்பப்படுகிறார்கள்

### கண்டாவளை உதவி அரச அதிபர்

(கிளிநொச்சி)

வெளிநாடுகளில் நடைபெறும் சைவசமய மகாநாடுகளில் கலந்து கொண்டு உரையாற்ற கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒருவராவது செல்ல வேண்டும்.

அப்படிப் பட்ட ஒரு சமய அறிஞரை உருவாக்கித்தர வேண்டியது இங்கு வாழுகின்ற சைவசமய மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மலையகத்திலிருந்து பாதிக்கப்பட்டு முதலாவதாக வந்து கிளிநொச்சியில் குடியேறிய தர்மபுரம் மக்கள் மத்தியில் இந்து இளைஞர் சங்கம் ஒன்றை ஆரம்பித்து வைத்துப் பேசிய கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. சதா தனபாலசிங்கம் மேற் கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. கா. வீரசிங்கம் தலைமையில்நடைபெற்றஇவ்வைபவத்தில் திரு கா. தனபாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

32 வருடங்களுக்கு முன் மலையகத்திலிருந்து பாதிக்கப்பட்டுவந்து தர்பபுரத்தில்குடியேறிய மக்கள் இங்கு வந்தும் வறுமையிலேயே வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும் கூட எந்த நிலையிலும் மதம்மாறாது சைவமதத்தையே இறுகப் பற்றியிருக்கிறீர்கள்.

இது நீங்கள் சைவ மதத்தின் மீது கொண்ட நம்பிக்கையைஎடுத்துக் காட்டுகிறது.

உங்களுடைய பிள்ளைகளில் பலர் கல்வி கற்கக் கூடிய திறமை இருந்தும், வறுமையால் கல்வி கற்பதில்லை. சிறு வயதிலேயே கூலி வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

பெற்றோர்கள் தாம் கஷ்டப் பட்டாவது தமதுபிள்ளைகளுக்கு கல்வி அறிவைப் புகட்டமுன் வரவேண்டும்.

உங்கள்மத்தியிலிருந்து சிறந்த கல்விமான்கள் வெளி வர வேண்டும். சமய அறிஞர்கள் வெளிவரவேண்டும். வெளிநாடுகளில் நடைபெறும் சைவ சமய மகா நாட்டில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து செல்லும் முதலாவது பிரதிநிதி தர்மபுரத்திலிருந்து தான் தெரிவாக வேண்டும். அதற்காகப் பாடுபடுங்கள் என்றார்.

கவிஞர் நவபாலகோபால் திரு.பொன். நித்தியானந்தன் ஆகியோரும் உரையாற்றினர்.

## இன்று

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட இந்துஇளைஞர்பேரவையின் ஆட்சிக்குழுக் கூட்டம் பேரவைத் தலைவர் திரு.வே.கெ. தனபாலன்தலைமையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை காலை ஒன்பது முப்பது மணிக்கு நடைபெற உள்ளது. 24

## குழாய் நீர் துண்டிக்கப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரசுற்றாடலில் குழாய் நீர்க்கட்டணம் செலுத்தாத பாவனையாளர்களின் குழாய் நீர்துண்டிக்கப் படவுள்ளது.

இதற்கான அறிவித்தல் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் எடுக்கப் பட்டுள்ளது. (37)

## வர்த்தகர் சங்க பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை வர்த்தகர் சங்கப்பொதுக் கூட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி இணைப்பாளர் திரு.குணம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. எம். பிரேம்குமாரும் செயலாளராக திரு.வி.பழனிவேலும், பொருளாராக திரு.ஆர்.யோககுருவும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

# தமிழ்மொழி அமுலாக்கல் குறித்து திணைக்கள அதிகாரிகள் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

நடைமுறையில் தமிழ் மொழி அரசகரும மொழியாக இருப்பது குறித்தும் தமிழ் மொழியை அரசகரும மொழியாக அமுல் படுத்துவதில் உள்ள கஷ்டங்கள் குறித்தும் ஆராயவென அரசகரும மொழிகள் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் யாழ். செயலகத்துக்கு விஜயம் செய்து அரசஅதிபருடன் ஆலோசனை செய்து சென்றுள்ளனர்.

இக்குழுவுக்கு தலைமை தாங்கிவந்த அரசகரும மொழிகள் திணைக்கள உதவியாணையாளரிடம் யாழ். அரசாங்க அதிபரால் சில குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது அவையாவன: யாழ் மாவட்டத்தில் உள்ள பதின்நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஐந்து தமிழ் தட்டெழுத்தார்களே தற்போது உள்ளனர். ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இந்தப் பதவிக்கான வெற்றிடங்கள் உருவாக்கப்பட்டு நிவர்த்தி செய்ய வேண்டும், யாழ். செயலகத்தில் இருக்க வேண்டிய மொழிபெயர்ப்பாளர்களில் இருவர் மட்டுமே இப்போது உள்ளனர் என்று முறையிட்டுள்ளார்.

இதற்கு அரசகரும மொழிகள் திணைக்கள உதவியாணையாளர் கருத்துத் தெரிவிக்கும் பொழுது வட பகுதியில் உள்ள ஏனைய மாவட்டங்களான மன்னார், வவுனியா போன்ற இடங்களிலும் இதே பிரச்சினை இருப்பதாக கூறியுள்ளனர்என யாழ் அரசாங்க அதிபர் ஈழநாதத்திற்குத் தெரிவிக்கும்போது குறிப்பிட்டார். (லோ)

## •சனசமூகநிலைய திறப்பு விழா

(நயினாதீவு)

நயினாதீவு சனசமூக நிலையம் புதிதாக கட்டிடமொன்றினைக் கட்டி முடித்துள்ளது. இதனை அண்மையில் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாவும் வடக்கு கிழக்கு மாகாணசபை- சமநல சேவை ஆணையாளர் திரு.ப.க.பரமலிங்கமும் திறந்து வைத்தார்கள்.

இந்நிலையத் தலைவர் திரு. ப.க. மகாதேவாவின் பெருமுயற்சியால் மிகக் குறுகிய காலத்துள் இக் கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# 5 லட்சம் பனை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன

## பனை அபிவிருத்தி சபைத்தலைவர்

(கொழும்புத்துறை)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பனைவளத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் நலனை மனதிற் கொண்டு ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்துக்கும் இரு ஊழியர்களை நியமித்து கசிப்பு, சட்ட விரோத மது விற்பனை போன்ற விடயங்களைத் தடை செய்ய முன் வந்தமைக்கு அனைவரின் சார்பிலும் தமது நன்றியை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவருக்குத் தெரிவிப்பதாக பனை அபிவிருத்தி சபைத் தலைவரும் தெங்குபனம் பொருள் சமாச செயலாளருமான திரு. க. நடராசா விடுத்த விசேட அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையினால் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் வருமானமும் எதிர்காலமும் பனைவளத்தின் ஒரு பகுதியும் உறுதிப்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது போலவே எமது இயற்கை மூலவளமான பனை வளத்தை வீணாக தறித்து அழிக்கும் நடவடிக்கையையும் உடனடியாகத் தடைசெய்யும்படி விடுதலைப்புலிகள் முன்னணியை தாம் கோரியுள்ளதாகவும், கடந்த சில வருடங்களில் வீணாகத்தறித்து அழிக்கப்பட்டன.

ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட பனை வளத்தை ஈடு செய்யும் விதத்தில் வடக்கு கிழக்கு முழுவதிலும் 20 இலட்சம் பனம் விதைகள் நாட்டுவதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடு மூலதனம் மூலம் பனம் பழத்தை அடிப்படையாகக் கொண்ட மாபெரும் தொழிற்சாலை ஒன்றை வடமராட்சியிலும் ஏற்றுமதிக்கான தும்பு, பிரஸ் தொழிற்சாலை ஒன்றை மன்னாரிலும் நிறுவும் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதாகவும் திரு. நடராசா தெரிவித்தார். (24)



**திரு. வே. சதாசிவம்**
(முன்னாள் பரீட்சை உதவி ஆணையாளர்)

திரு. வே.சதாசிவம் சென்ற மாதம் இரண்டாம் திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார் என்ற செய்தி, அவரைத் தெரிந்தவர்களுக்கு, அவர் குடும்பத்துடன் பழகியவர்களுக்கு அதிர்ச்சி தருவதாகும்.

சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்புக்கல்லடியில் இராமகிருஷ்ண மடத்தில் சிவானந்த வித்தியாலயத்தை ஆரம்பித்து அனாதைப் பிள்ளைகளுக்குப் புகலிடம் அளித்து, கல்வியூட்டத் தொடங்கியபோது, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட சில மாணவர்களில் திரு.சதாசிவமும் ஒருவர்.

சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்றுப் பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெற்று பீ ஏ. எம்.லிட். பட்டம் பெற்றபோதும், சிவானந்த வித்தியாலயத்திலும், வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணியாற்றிய போதும், கொழும்பில் உத்தியோக மொழி இலாகாவில் கடமையாற்றிய போதும் சுவாமி விபுலானந்தருடன் தொடர்பு கொண்டிருந்தார். இலங்கையிலிருந்தவரை இராமகிருஷ்ண மிஷனுடன் அவர் குடும்பமே நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது. வீட்டில் அவர் வைத்திருந்த பெறுமதி மிக்க நூல்கள், புத்தக அலுமாரிகள் யாவற்றையும் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்துவிட்டே ஆஸ்திரேலியாவுக்குப் பயணமானார்.

சிறு வயதில் கஷ்டமான நிலையிலிருந்தபோது தமக்கு உதவி செய்த குப்புசாமி

வவுனியாவில்

# நவீன சந்தை புனரமைக்க 43 லட்சம் ஒதுக்கீடு

(வவுனியா)

வவுனியா நவீன சந்தைக் கட்டடம் புனர்நிர்மாணம் செய்யப்பட உள்ளது. இதன் வேலைகளை ஆரம்பிப்பதற்காக வவுனியா நகரசபையில் 43 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டு யூன்மாதம் முதலாம் திகதி விமானப்படையினரால் இக்கட்டடம் தீ வைத்துக் கொழுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இரு மாடிகள் கொண்ட இக்கட்டடம் தீ[illegible]கப்பட்ட நாளில் இருந்து, இடிந்த நிலையில் எதுவித பாவனையுமற்று காணப்பட்டு வருகிறது.

மிகவிரைவில் இக்கட்டடத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் பொதுமக்கள் நகரசபைக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தி, ஒத்துழைக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கேட்கப்பட்டுள்ளது. (தி)

# யாழ் - மட்டுநகர் பயணத்துக்கு இணைப்பு ரயில்பெட்டி தேவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு — யாழ்ப்பாணம் புகையிரத பயணிகள் நலன் கருதி மீண்டும் புகையிரத பெட்டி இணைப்பு சேவை நடைபெற வேண்டுமென பயணிகள்குரல் எழுப்புகிறார்கள்.

முன்பு மட்டக்களப்பு - மாகோ சரக்குரயிலில் யாழ். புகையிரத பெட்டி இணைக்கப்பட்டிருந்தது. இது கொழும்பு - யாழ்ப்பாணம் இரவு புகையிரத்தில் இணைக்கப்பட்டு இச்சேவை நடைபெற்றது.

ஆனால் தற்போது புகையிரத பெட்டிகள் இணைக்கப்படுவதில்லை.

மாகோவில் இறங்கி யாழ்ப்பாணம் தபால் புகையிரதத்தில் ஏறவேண்டிய நிலை ஏற்படுகிறது. (37)

## தமிழ் மொழிக்கு உரிய இடம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலைய விளம்பரப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (37)

ஜனாவின்

# உருவப்பட திரைநீக்கமும் நினைவஞ்சலிக் கூட்டமும்

(மன்னார்)

கடந்த வருடம் மேதின நாளில் இந்திய வல்லாதிக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள சிறையை உடைத்து நாற்பத்திரண்டு விடுதலைப் புலிகளைத் தப்ப வைத்ததுடன், தாமும் வீரமரணமடைந்த ஜனாவின் ஓராண்டு நினைவு தினம் சென்ற மேதின நாளில் கொண்டாடப்பட்டது.

இவ் நினைவஞ்சலிக் கூட்டமானது, கள்ளியடி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் ஜனாவின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டதோடு, நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. சுரேஷ் அவர்களும், பூநகரி பள்ளமடு பிரதேசப் பொறுப்பாளர் சாம் அவர்களும், பூநகரி சிற்றாரவைப் பொறுப்பாளர் சாமுவேல் ராஜ் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

இவ்விழாவிலே முழங்காவில் பிரிவைச் சேர்ந்த சிறுவர், சிறுமிகளது 'அஞ்சாத நெஞ்சங்கள்' என்ற புரட்சிகர நாடகமும் அதனைத் தொடர்ந்து வில்லிசைக் கச்சேரியும் நடைபெற்றது. இவ் விழாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

# சிக்கன கடனுதவு சங்கம்

நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
சுப்பிரமணியம் அன்னலட்சுமி
(செந்துமணி)

கிளிநொச்சி, கச்சேரி

## கேள்வி கோரும் அறிவித்தல்


கிளிநொச்சிக் கச்சேரிகேள்விச் சபைத் தலைவரால், கிளிநொச்சிக் கச்சேரி பெண் ஊழியர்களுக்கான விடுதி அமைத்தலுக்கு கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து1990.04.21ஆம் திகதிபத்திரிகைகள் மூலம் என்னால் கோரப்பட்டன. இவ் வேலைகளுக்கான கேள்விகள் முடிவு திகதி 1990 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென அறியத்

தோற்றம்: 29-11-1933 மறைவு: 5-4-1990

எங்கள் குலவிளக்காகத் திகழ்ந்து சிவபத மடைந்த திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமியின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறுஅழைக்கின்றோம்.

ஸ்ரீஸ்தான், கணவன்
வராத்துப்பளை, ஆர். எஸ். சுப்பிரமணியமும்
பருத்தித்துறை, குடும்பத்தினரும்.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி நந்தினி சுந்தரலிங்கம்

(விஞ்ஞான கணித ஆசிரியை, வடஇந்து மகளிர் கல்லூரி.)

தோற்றம்: 07 - 10 - 1952 இறையுடன் கலப்பு: 23 - 04 - 1987

திதி: 20. 04. 1990

அன்பின் திருவுருவே!
ஆலய மணி விளக்கே!
இன் சொலால் எமையாற்றிய தெய்வமே!
ஈசன் இணையடியை அடைந்து
உம்பர் நிலையடைந்த நந்தா மணி விளக்கே!

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
'துவாரஹா' Dr. பொ.பஞ்சநாதன்
புலோலி கிழக்கு, குடும்பத்தினர்.
பருத்தித்துறை.

(R/453)

தருகின்றேன்.

இவ் வேலைகளுக்குரிய கேள்விப் பத்திரப் படிவங்களை மீளப்பெறக்கூடியதும் மீளப்பெற முடியாததுமான தொகைகளைச் செலுத்தி 1990. 05. 18 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்
திணைக்கள கேள்விச் சபைத்தலைவரும் மாவட்ட ஆணையாளரும் அரசாங்க அதிபரும்

கச்சேரி, கிளிநொச்சி கிளிநொச்சி மாவட்டம்.
05. 05. 1990

(B-852)

உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES AIDE**

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்
Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B/817)

# பல்வேறு உதவிகளை செய்கிறது

(கிளிநொச்சி)

சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் கடன் வழங்குவதற்கு மட்டும் ஏற்படுத்தப்பட்ட ஒரு சங்கமல்ல. இது மக்களின் சேமிப்பை ஊக்குவிக்க மக்களால் மக்களுக்கு உருவாக்கப்பட்ட சங்கமாகும்.

ஜெயந்தி நகர் தெற்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கக் கூட்டத்தில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவு சங்க அதிகாரி திரு.எல்.ராசரத்தினம் மேற் கண்டவாறு கூறினார்.

மேற்படி கூட்டம் ஜெயந்தி நகர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஜெயந்தி நகர் தெற்கு சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்க உப தலைவர் திரு.அ.பாலசுந்தர (ஐயாத்துரை) தலைமையில் நடைபெற்றது.

திரு. ராசரந்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

கஷ்டப்பட்டவர்கள் எந்த நாளும் கஷ்டப்பட்டவர்களாகவே இருக்கக் கூடாது, அவர்களும் நல்ல நிலைக்குத் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள இச்சங்கம் உதவி செய்ய வேண்டும்.

வறியவர்களையும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களையும் இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்க்க வேண்டும். வறியவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வரவும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களை மக்கள் மதிக்கக் கூடிய நற்பிரசைகளாகவும், நாணயம் மிக்கவர்களாகவும் ஆக்க வேண்டியது இச்சங்கத்தின் பொறுப்பாகும்.

இச்சங்கத்தில் கட்டாய சேமிப்பு, சாதாரண சேமிப்பு, சிறுவர் சேமிப்பு எனப் பல்வகைப்பட்ட சேமிப்புக்கள் உண்டு. அங்கத்தவர்கள் கட்டாய சேமிப்புக்கும், சாதாரண சேமிப்புக்கும் பணம் கட்டி வருகிறார்கள். பாடசாலைச் சிறுவர் முதல் 18வயதிற்கு உட்பட்ட சகலரையும் சிறுவர் சேமிப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

உதவி செய்த குப்புசாமி செட்டியார் பிற்காலத்தில் கஷ்டத்துக்குள்ளானார். நன்கு படித்து முன்னேறிக் கொண்டிருந்த திரு. சதாசிவம் குப்புசாமிச் செட்டியாரின் மகளை மணம் செய்து கொள்வதாக வாக்களித்திருந்தார். திரு. சதாசிவம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றதும் யாழ்ப்பாணத்திலிருந்து சிலர் அவரிடம் சென்று பெருந் தொகையான பணம் சீதனமாகத் தருவதாகக்கூறி மணம் பேசினர். அவர் அவற்றை உதறித் தள்ளிவிட்டு குப்புச்சாமிச் செட்டியாரின் மகள் பத்மாவதியையே மணம் செய்து கொண்டார்.

ஆஸ்திரேலியாவிலிருந்த போதிலும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலைப் பற்றியும் அதன் அபிவிருத்தி பற்றியும் சிந்தித்துக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

இராமகிருஷ்ண மடத்துடனும், சுவாமி விபுலானந்தருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியரும், வண்ணை. ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஆதீன மகாசபை ஸ்தாபகரும் முன்னாள் ஈழநாடு பொது முகாமையாளரும், சமூக சேவையாளருமான திரு. து. சீனிவாசகத்தின் சேவைகள் பற்றி நீண்டதொரு கட்டுரை எழுதியனுப்பியிருந்தார். அது இன்னமும் உபயோகிக்கப் படாமலிருக்கிறது.

திரு. சதாசிவம் கல்வி ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

—ஓரன்பன்

## வெல்லன் விநாயகர் ஆலய திருவிழா

(கரவெட்டி)

மூன்று ஆண்டு காலஇடைவெளிக்குப்பின்னர் கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்தில் இம்முறை வெகுசிறப்பாக திருவிழா நடை பெற்று வருகின்றது.

1987ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கும் அட்டகாசங்களுக்கும் இலக்கான மேற்படி ஆலயம் தொடர்ந்து இந்தியப் படைகளின்அட்டகாசங்களுக்கும் இலக்காகி வந்தது.

இதனால் சனசஞ்சாரமற்ற பகுதியாக நள்ளிரவு வேளைகளில் வெறிச்சோடிக் காணப்பட்ட மேற்படி ஆலயத்தில் இம்முறை ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என பல்வேறு தரப்பினரும் படையெடுத்து வருகின்றனர், (18)

### சிந்தனைக்கு

நெஞ்சிலுரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடி - கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 05 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## வீண் பேச்சு

அரசுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் இம்மாதம் பதினைந்தாம் தேதி பேச்சுவார்த்தை நடைபெறுமென்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் நாடு திரும்பினால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் ரஞ்சன் கூறியிருக்கிறார்.

யாழ். மெயில் ரயிலில் பயணம் செய்த சிறிலங்கா பொலிஸ்காரர் ஒருவர் மீசாலைக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்தான் காரணம் என்றும் அமைச்சர் சொல்லியிருக்கிறார்.

இலங்கை அரசமைப்பிற்கு மாறாக வடக்கு கிழக்கு மாகாணசபை ஈழப்பிரகடனத் தீர்மானத்தைத் தன்னிச்சையாக நிறைவேற்றியதனால் வரதராஜப் பெருமாள் நாடு திரும்பினால் அவர்மீது நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்திருக்கிறது.

ஈழக் குடியரசுப் பிரகடனத்துக்கு ஒரு வருட அவகாசம் கொடுத்து அதற்கான அரசியலமைப்பை உருவாக்கும் அரசியல் நிர்ணயசபையாக வடக்கு கிழக்கு மாகாணசபையை மாற்றுவதே வரதராஜப்பெருமாள் நிறைவேற்றிய தீர்மானமாகும்.

இத்தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு வரதராஜப் பெருமாள் தலைமறைவாகி விட்டார்.

பெருமாள் நாடு திரும்பினால் அவர்மீது அரசு நடவடிக்கை எடுக்கவிருப்பதால் அவர் நாடு திரும்பாமலே விடலாம். அப்படியே அவர் நாடு திரும்பினாலும் அவர் அரசுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். நடத்த உத்தேசித்திருக்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியாது.

ஈ. பி. ஆர். எல். எவ்வின் பொதுச் செயலாளர் பத்மநாபாவின்மீது இலங்கை உயர்நீதிமன்றம் விடுத்துள்ள பிடிவிறாந்து இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறது.

# தேசிய ஒடுக்குமுறை தமிழீழ பொருளாதாரத்தை சீரழித்தது

நீண்ட தொடர்ச்சியான தேசிய ஒடுக்கு முறையின் அழுத்தங்கள் தமிழீழ மக்களின் பொருளாதார வாழ்வில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இருந்து எமது மண் அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளதுடன், இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டும் ஆயுதப்படைகளை ஏவி விட்டும், சிங்கள அரசுகள் தமிழ்மக்களின் சொத்துடமைகளுக்குப் பேரழிவை ஏற்படுத்தின. இவ்விதம் திட்டமிட்ட முறையில் ஈழத்தமிழ்மக்களின் பொருளாதார வாழ்வு சீரழிக்கப்பட்டதால் தமிழீழப்பொருளாதாரப்புனர்நிர்மாணப்பணியானது முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சோசலிசப் பொருளாதாரத் திட்டமானது சுரண்டல் முறைகள் அற்ற ஏற்றத் தாழ்வுகள் ஒழிந்த சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே நோக்கமாகக் கொண்டது இக் கோட்பாட்டைச் செயல் படுத்தும் வகையில் எமது பொருளுற்பத்திவடிவங்கள் நெறிப் படுத்தப்பட வேண்டும் இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கமான தமிழீழ ஆய்வு நிறுவனம் RESEARCH ORGANISATION OF TAMIL EELAM) தமிழீழத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. நெருக்கடிக்காலப் பொருளாதாரத் திட்டங்கள் நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்கள், என ரூட் இன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன.

இக்கட்டுரையானது சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்புக்களையும் ரூட் இன் செயற்பாடுகள் எதிர் காலத் திட்டங்கள் பற்றியும் சுருக்கமாக ஆய்வு செய்கின்றது.

(2) தமிழ்ப்பகுதிகளில் ஏற்படக்கூடிய தொழில் வாய்ப்புக்களைக் குறைத்து அவற்றைச் சிங்களப் பகுதிகளுக்கு இடம் பெயர்த்தல்.

(3) தமிழ்ப் பிரதேசம் பொருளாதார வளங்களில் பின்னடைவானது என்ற மாயையை உருவாக்குதல்.

என்பவற்றைக் குறிப்பிடலாம், இவ்வகையில் தமிழ்ப் பிரதேசங்களில் புதிய கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ள முயன்ற தனியார் நிறுவனங்கள் அரசினால் புறக்கணிக்கப்பட்ட அதே வேளை அவற்றைச் சிங்களப் பகுதிகளில் மேற்கொள்வதற்கு மறைமுகமாக ஊக்குவிக்கப்பட்டனர்.

ஸ்ரீ லங்கா அரசுகளின் இத் திட்டமிட்ட பொருளாதார புறக்கணிப்பிற்கும் சுரண்டலுக்கும் உதாரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) சீமேந்து தயாரிப்பின் முக்கிய மூலப் பொருளான சுண்ணாம்புக் கல் எமது மண்ணில் இருந்தே பெருமளவில் எடுக்கப்படுகின்றது. சுண்ணாம்புக் கல்லை அகழ்வதால் ஏற்படும் சூழல் பாதிப்புக்களை (பயிர்ச் செய்கைப் பாதிப்பு, நன்னீர் உப்பு நீராகும் அபாயம்) தவிர்ப்பதிலோ அன்றிக் குறைப்பதிலோ அக்கறை காட்டாது இருந்து வருதல்.

(ஆ) ஸ்ரீலங்காவின் ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கும் கடல்வாழ் உயிரினங்களில் (இறால். கடலட்டை, கருவாடு) பெரும்பகுதி தமிழீழப் பகுதிகளிலிருந்தே பிடிக்கப்படுகின்றபோதும் பதனிடல், பெட்டிகளிலடைத்தல் ஆகிய வேலைகள் பெரும்பாலும் சிங்களப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்படல்.

(இ) மகாவலிகங்கையை சிங்களப் பகுதிகளுக்குத் திசை திருப்பும் திட்டத்தின் கீழ் பெருமளவு பணத்தை முதலீடு செய்துள்ள அரசானது வரண்ட பிரதேசமான வட

(எ) தமிழீழத்தின் உல்லாசப் பயணத்துறை இனப் போராட்டங்களுக்கு முன்பிருந்தே புறக்கணிக்கப்பட்டு வருதல்.

மேற்குறிப்பிட்டவை தமிழ்ப் பிரதேசம் மீதான சிங்கள அரச பொருளாதாரக் கொள்கையின் சில உதாரணங்களாகும். இப்பொருளாதாரக் கொள்கையின் மூலம் தமிழ்ப் பிரதேசங்கள் பொருளாதார வளங்களற்றவை என்னும் மாயையை ஏற்படுத்துவதில் சிங்கள அரசுகள் ஓரளவு வெற்றியடைந்துள்ளன என்றே கருதவேண்டும். தமிழீழம் தனியொரு நாடாகத் தனது பொருளாதாரப் பளுவைத் தாங்கும் வளங்களை கொண்டதா எனும் சந்தேகம் தமிழ் மக்களிற் பலருக்கு இன்றும் காணப்படுவது சிங்கள அரசுகள் ஏற்படுத்திய மாயையின் வெளிப்பாடுகளே ஆகும்.

தமிழீழம் எதிர்நோக்கும் பொருளாதார பிரச்சினைகள் எவை? இவற்றை முகங்கொடுப்பதற்கு ஏற்ற உற்பத்திச் சாதனங்களை நாம் கொண்டிருக்கிறோமா? இவ் உற்பத்திச் சாதனங்களின் அடிப்படையில் நாம் மேற்கொண்டு வரும் ஆய்வுகள் எத்தகையன என்பதைச் சுருக்கமாகத் தொடர்ந்து ஆராய்வோம்.

சுதந்திரத் தமிழீழம் தனது தேசியப் பொருளாதாரப் புனர் நிர்மாணத்தை வெற்றிகரமாகச் சாதிக்கும் வளங்களைக் கொண்டிருக்கிறது. இவற்றைச் சரியான முறையில் திட்டமிட்டு உபயோகிப்பின் தமிழீழம் சுயபூர்த்தியடைந்த நாடாக விளங்கும் தமிழீழ ஆய்வுநிறுவனமானது எமது மண்ணின் அரசியல். சமூக, பொருளாதார வாழ்விற்கு ஏற்றமுறையில் தனது வேலைத் திட்டங்களை இரண்டு வகையாக மேற்கொண்டு வருகிறது:

(1) நெருக்கடிக் காலப் பொருளாதாரத் திட்டம்
(2) நீண்டகாலப் பொருளாதாரத் திட்டம்

### நெருக்கடி காலப் பொருளாதாரத் திட்டம்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது போராட்டத்தின் நெருக்கடியான காலத்தில் மக்களின் அத்தியாவசிய தேவையை ஓரளவேனும் பூர்த்திசெய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டது. கடந்த காலங்களில் ஸ்ரீ லங்கா அரசு மேற்கொண்ட பாரிய பொருளாதாரத் தடைகளின் போது இந்நெருக்கடிகாலப் பொருளாதாரத்திட்டமானது வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது.

(தொடரும்)

## மாநகரசபை கவனிக்குமா?

மக்கள் மடல்

யாழ்ப்பாணம் கொழும்பு ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து யாழ். ரயில் நிலையத்துக்கு வாகனங்களின் வருகை அதிகரித்துள்ளது அத்துடன் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளும் இங்கு வருவது அதிகரித்துவருகிறது.

ஆனால் யாழ்ப்பாணம்

... மாக இருப்பது மட்டுமன்றி ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரேசன் வீதி சந்தியில் குப்பை கூழங்கள் அகற்றப்படாமல் காணப்படுகின்றன.

இவற்றை அண்மையில் இங்கு வந்த உல்லாசப்பயணி ஒருவர் படம் பிடித்துச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

இரவு நேரம் இருளை அகற்றி மின் விளக்குகள் பொருத்திய மாநகரசபை இந்தக் குப்பைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்குமா?

## ஊர்சுற்றி

எழுதுவது

எனக்கு நேற்று வந்த கடிதம் இது; அப்படியே உங்கள் பார்வைக்குத்தருகிறேன்.

ஊர்சுற்றியாரே!

யாழ். பஸ்நிலையத்தில் உள்ள பிரயாணிகள் தரிப்பு நிலையங்கள் இருளில் இருப்பதைச் சுட்டிக் காட்டியதையிட்டு மகிழ்ச்சி. இப் பிரச்சினைக்கு யார் மூலகாரணம் என்று இங்கு எடுத்து காட்டுவது எனது கடமையாகும். நான் இப் பிரச்சினையில் நேரடியாக சம்பந்தப்படாவிட்டாலும் அநியாயமாக ஒரு பகுதியினர் மீது பழி போடக் கூடாது என்பதற்காக இவ் விளக்கக் கடிதத்தை வாசகர்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறேன்.

வ. பி. போ. சபையில் யாழ். பஸ் நிலையத்தை வெளிச்சமயப் படுத்த ஊழியர்கள் உள்ளனர். இச் சிவில் எலெக்றிசியன்மாருக்கு போதிய வேலை இல்லை. ஆக மின்பராமரிப்பு வேலைதான் இவர்களைக் கொண்டு தாராளமாக பஸ்தரிப்பு நிலையத்திற்கு மின் இணைப்புக்கள் வழங்கியிருக்கலாம். மு[illegible] பலமுறை இவர்கள் தான் செய்தார்கள் ஆகக் கூடினால் நான்கு அல்லது ஐந்து இரவுகள் பஸ் நிலையத்தில் கடமை செய்ய விட்டால் பஸ்தரிப்பு நிலையம் எப்பவோ வெளிச்சம் பெற்றிருக்கும். இவர்களது சேவையை ஏன் பெறவில்லை? தமது பொறுப்பை ஏன் யாழ். மாநகர சபைக்கு பாரம் கொடுக்க வேண்டும்? மின் இணைப்புக்கு வேண்டிய சகல பொருட்களையும் வ. பி. போ. சபை வாங்கியுள்ளது. இப்போது வழங்கிய பொருட்கள் பற்றாது என்று இழுபறி. எப்பொழுதும் ''உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை'' நிச்சயமாக வ. பி. போ. சபையே இம்மின் இணைப்பு வேலையைச் செய்து பொதுமக்களாகிய வாடிக்கையாளர் களுக்கும்

அவர் கொழும்புக்கு வந்தால் அவரும் கைது செய்யப்படுவார்.

எனவே ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர்களான பத்மநாபாவும் வரதராஜப்பெருமாளும் அரசுடன் நடத்த உத்தேசித்துள்ள பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள முடியாது; கலந்துகொள்ள மாட்டார்கள்.

ஆக தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று ஈ. பி. ஆர். எல். எவ். எம். பியான பிரேமச்சந்திரன் வலியுறுத்திக் கேட்டதாலும் பத்தொன்பது அம்சக்கோரிக்கை முந்நிபந்தனையல்ல என்று சொன்னதாலும் அரசு பேச்சுவார்த்தை நடத்த சம்மதித்திருக்கலாம்.

ஈ. பி. ஆர். எல். எவ். எம். பிக்களுடன்தான் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதென்றால் இதில் என்ன பயன் ஏற்படப் போகிறது?

அரச தரப்பில் அமைச்சர் ரஞ்சன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார். வடக்கு கிழக்கு சமாதானக் குழுத் தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீதும் இப்போது இங்கில்லை. அவர் பதினைந்தாந் தேதிக்குமுன் வருவாரென்றும் எதிர்பார்க்க முடியாது.

ஒரு அமைச்சரும் எம். பிக்களும் சந்தித்துப் பேசுவது முக்கியமான பேச்சுவார்த்தையாகவோ பயனுள்ள பேச்சாகவோ அமைய முடியாது.

பாராளுமன்றக் கூட்டம் முடிந்தவுடனேயோ கூட்டம் நடைபெறும் சமயத்திலேயோ எம். பிக்களை அமைச்சர் பாராளுமன்றக் கட்டிடத்திலேயோ சந்தித்துப் பேசலாம். இதைவிட இவர்களுடைய சந்திப்புப் பெறுமதியானதாக இருக்க முடியாது.

''விடுதலைப் புலிகளை அரசு நம்புகிறது; அரசைப் புலிகள் நம்புகிறார்கள். ஈ. பி. ஆர். எல். எவ்வும் மற்றும் குழுக்களும் இந்தியாவைத்தான் இன்னமும் நம்பிக்கொண்டிருக்கின்றன'' என்று அமைச்சர் ரஞ்சன் பகிரங்கமாக கூறிய பின்னரும் அவருடன் ஈ. பி. ஆர். எல். எவ். எம். பிக்கள் பேசுவது பயனற்றது மட்டுமல்ல வெட்கக்கேடானதுமாகும்.

வரதராஜப்பெருமாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சராக இங்கு இருந்தபோது பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி பிரேமதாசா அழைத்தபோது டில்லிக்குச் சென்று அங்கு அமைச்சர்களைச் சந்தித்துப் பேசினார்.

ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர்கள் பத்மநாபாவும் வரதராஜப்பெருமாளும் இல்லாமல் அரசுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். பேச்சுவார்த்தை நடத்துவதென்றால் நாய் வாலை ஆட்டுவதற்குப் பதிலாக வால் நாயை ஆட்டுவது போன்றதுதான்!

வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே இல்லாத ஈ.பி.ஆர்.எல்.எவ். எம். பிக்களுடன் அரசு பேச்சு நடத்தி என்னத்தைச் சாதிக்கப் போகிறது. இது வீண் பேச்சு!

**திட்டமிட்ட பொருளாதார புறக்கணிப்பு**

தமிழீழத்தின் பொருளாதார வளங்கள் தொடர்ந்தும் வந்த சிங்கள அரசுகளினால் சுரண்டப்பட்டு வந்துள்ளன. சிங்கள அரசுகள் தமிழீழ மண்ணில் இருந்துபெறப்படும் உற்பத்தி மூலதானங்களைக் கொண்டு சிங்களப் பகுதிகளில் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், இவ் உற்பத்தி மூலதானங்களின் ஏற்றுமதியால் பெறப்படும் இந்நியச்செலாவணியை சிங்களப்பகுதிகளின் அபிவிருத்திக்குப் பிரயோகிப்பதன் மூலமும் திட்டமிட்ட ரீதியில் தமிழீழத்தின் மீதான இப்பொருளாதாரச் சுரண்டலை நடைமுறைப்படுத்தி வந்தன. இதன் நோக்கங்களாக,

(1) தமிழ் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளுக்குக்கூட சிங்களப் பிரதேசங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையினைச் செயற்கையாகத் தோற்றுதல்.

அவசியமான சிறு அணைகள், நீர்த்தேக்கங்கள் கட்டுவதைக் கூடப் புறக்கணித்து வருதல்.

(ஈ) கந்தளாம். அம்பாறை. ஆகிய பாரம்பரிய தமிழ் பிரதேசங்களிலுள்ள சீனித்தொழிற்சாலைகளில் கடமையாற்றும் 2000 (ஏறக்குறைய) தொழிலாளர்களில் 10% இற்கும் குறைவானவர்களே தமிழர்களாவர்.

(உ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தமிழ் பிரதேச அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள் சிங்களப் பகுதிகளுக்கே செலவிடப்பட்டுவருதல் தவிர வெளிநாட்டு உதவிகளைக்கொண்டு மேற்கொள்ளப்படும் வீடமைப்பு மற்றும் நகர்ப் புனருத்தாரணங்களும் சிங்களப் பகுதிகளில் மேற்கொள்ளப்படல்.

(ஊ) கடற்பாதுகாப்பு வலயமென்ற பெயரில் தமிழீழப் பகுதிகளைச்சுற்றியுள்ள கடற் பிராந்தியங்களில் மீன் பிடி தடுக்கப்பட்டிருத்தல்,

(முன்னைய தொடர்ச்சி)

**இணக்க மன்றுகளுக்கு பொதுமக்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்குரிய தகைமைகள்.**

★ குறித்த சிற்றூர் அவைப்பிரிவுகளில் நிரந்தரமாக வதிபவராயும் (30) முப்பது வயதுக்கு மேற்பட்டவராயும், நன்நடத்தையும் ஒழுக்கமும் சமூகத்தில் நன்மதிப்புப் பெற்றவராயும் அனுபவம் வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும்.

★ மோசடி, கொலை, சொள்ளை, சுற்பழிப்பு, போதை மருந்து வியாபாரம் போன்ற சமூகவிரோத செயல்களில் ஈடுபடாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கடந்த காலங்களில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF), ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF), தமிழீழ விடுதலை இயக்கம் (TELO), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) போன்ற துரோக இயக்கங்களில் உறுப்பினராக இருந்த துரோகிகளுக்கும், தமிழீழ மக்களின் புனிதப்போருக்கு விரோதமாகச் செயற்பட்ட சமூக விரோதக் கும்பல் களுக்கும் காட்டிக் கொடுத்த கயவர்களுக்கும், இவர்களுக்கு ஆதரவு செய்த அடிவருடிகளுக்கும், இவ் இணக்க மன்றுகளில் உறுப்பினராக இருக்க அருகதை இல்லை.

(தொடரும்)

ஸ்ரேசன் வீதி, ...
வீதியின் நிலைமை மிக மோசமாகியுள்ளது. குறிப்பாக ஸ்ரேசன் வீதி குன்றும் குழியு...

எஸ். ராஜன்
ஸ்ரேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

# நிவாரணக் கோடுப்பனவு மோசடி பற்றி புகார்கள் - மூர்த்தி

(கிளிநொச்சி)

வடகிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பலருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. பாதிக்கப்படாத பலர் நிவாரணம் பெற்றுள்ளனர். ஒழுங்கான முறையில் திட்டமிட்டுச் செயல்படாததால்தான் இந்த நிலை ஏற்பட்டது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவேண்டிய நிவாரணம்' புனர்நிர்மாணம் சம்பந்தமான மகாநாட்டில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. மூர்த்தி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு- எஸ். வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையாவின் பிரதிநிதியாக மாம்பழம் சுரேஷ் மக்கள் முன்னணியின் அரச திணைக்கள. கூட்டுத்தாபன தொடர்பாளர் திரு. எம். ஜி. சிவபாதம்: கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா, மேலதிக அரசாங்க அதிபர் திரு.எஸ். அமிர்தலிங்கம், கிராமசேவகர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு மூர்த்தி மேலும் கூறியதாவது கடமைநேரத்தில் மது அருந்துவது. அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் இல்லாமல் இருப்பது, அலுவலகத்தில் இருந்தும் கடமைகளை நேர்மையாகச் செய்யாமல் இருப்பது ஆகியன பாரதூரமான குற்றமாகும்.

ஆதலால் சகலரும், மக்களின் கஷ்டங்களை உணர்ந்து நேர்மையாகவும் கடினமாகவும் இந்த நாட்டின் நலன் கருதிச் சேவை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாது தவறு செய்த சில கிராமசேவகர்கள் எம்மால் கண்டுபிடிக்கப் பட்ப் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நிவாரணக் கொடுப்பனவுகளில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், ஊழல்கள் மோசடிகள் நிறைய இடம் பெற்றிருப்பதாகவும் எமக்குப் புகார்கள் கிடைத்துள்ளன.

எழுதப் படிக்கத் தெரியாத பலர் இங்கு இருக்கிறார்கள். அப்படிப் பட்ட பலருக்குத்தான் நிவாரணம் கிடைக்கவில்லை.

பாதிக்கப்பட்ட பலர் இன்றும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு வந்து குடியேற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

எந்தவித பாதிப்புமில்லாது சுகமாக வீட்டில் இருந்த பலர் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எல்லா விதமான நிவாரணக் கொடுப்பனவுகளையும் பெற்றுக் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிராமசேவர்கள் சரியான முறையில்திட்டமிட்டுச்செயல்பட்டிருந்தால் இந்தக் தவறுகள் ஏற்பட்டிருக்கமாட்டாது

அரசாங்க அதிபர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் உண்மையாகப் பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்க மறுக்க வில்லை. தவறானவர்களுக்குக் கொடுக்கத் தான் அவர்கள் விரும்ப வில்லை சரியான தகவல்கள்கிடையாததால்தான் தவறானவர்களுக்குநிவாரணம்கிடைக்கிறது என்றார்.

... அவர்களது கடமையையும் வசதியாக செய்ய உதவி இருக்கலாம்.

வ. பி. போ. சபையின் அதிகாரிகளின் அக்கறையின்மை அசமந்தப் போக்கு பொதுமக்களையும், ஊழியர்களையும் பாதித்துள்ளது. இருளில் யாவரும் கஷ்டப்படுகின்றனர். யாழ். மாநகர சபையினரும் தம்மால் இயலாததை பாரம் எடுத்திருத்தல் ஆகாது-பாரம் எடுத்திருந்தால் மக்களது நன்மை கருதி பொறுப்பாக தமது கடமையை முடித்திருக்க வேண்டும்.

சம்பந்தப் பட்டவர்கள் உடன் செயலில் இறங்கி பிரயாணிகள் தரிப்பு நிலையங்களுக்கு உடன் மின் இணைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**உண்மை விளம்பி**

குறிப்பு:

இக் கடிதத்தை நேரில் ஒருவர் தந்து நிலைமையை நன்றாக எமக்கு விளக்கினார். மாசி மாதம் ஆரம்பிக்கப்பட்ட இவ் வேலை இன்னும் முடியவில்லை. நிச்சயமாக வ. பி. போ. சபை கோண்டாவில் உயர் அதிகாரிகள் இதற்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். ஆட்கள் இருக்கிறது. பொருட்கள் இருக்கின்றது ஆனால் பிரயாணிகள் தரிப்பு நிலையங்கள் இருளில் இருக்கின்றது வ.பி.போ.சபை ஊழியர்களும் பொதுமக்களும் அவதியுறுகின்றனர். தவிர்க்க முடியாத வேறு காரணங்களால் அதாவது தமது சக்திக்கு அப்பாற்பட்ட சாதனங்களால் தடைப்பட்டு இருப்பின் இங்கு இதனை சுட்டிக்காட்டியிருக்க மாட்டோம் உண்மை விளம்பிக்கு நன்றி.

★ ★ ★

ஈழநாதம்

# வடக்கு-கிழக்கு தொழிற் சங்கங்களால் தொழிலாளருக்கு ஒரு பயனுமில்லை- -காஸ்ரோ

(அட்டாளைச்சேனை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல அரசாங்க நிர்வாகங்களில் உள்ள தொழிற்சங்கங்களினால் தொழிலாளர்களுக்கு எதுவித பயனும் இல்லை. ஆகவே தற்போது எமது ஆட்சியின் கீழ் உள்ள மாகாணங்களில் அரசாங்க நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்களின் உரிமைகளைப் பெற்றெடுப்பதற்கும், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும் எமது இயக்கம் தமிழீழ மக்கள் முன்னணி அரசியல் கட்சி, மகளிர் பேரவை; மாணவர் பேரவை, தொழிலாளர் பிரிவுகளாக வளர்ந்தது. அந்தப் பிரிவை அவ்வப் பகுதியினர்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக தொழிற்சங்கங்களை அங்குரார்ப்பணம் செய்து வருகிறது. இவ்வடிப்படையில் அக்கரைப்பற்று டிப்போ ஊழியர்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கமாக ஒரு தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம் செய்துள்ளோம். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்ட அமைப்பாளர் திரு. காஸ்ரோ அவர்கள் அக்கரைப்பற்றுச் சாலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் பொழுது கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த காலங்களில் அரசியல் கட்சிகளால் எத்தனையோ தொழிற்சங்களையும் பல வருடங்களாக அறவீடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன:

அத்தொழிற் சங்கங்கள் வடக்குக்கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட எந்த ஊழியர்களுக்கும் எதுவித நஷ்ட ஈடுகளோ ஏனைய உதவிகளோ செய்து கொடுக்கப்படவில்லை என்பதை திட்டவட்டமாகக் கூற முடியும். ஆகவேதான் உயிரோட்டம் இல்லாத தொழிற்சங்கத்தினால் ஊழியர்களுக்கு எதுவித பிரயோசனமில்லை. எதுவித பிரயோசனமில்லாத தொழிற் சங்கங்களில் மக்கள் ஏமாந்து போவதை விடுத்து, ஊழியர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுத்து, மன நிறைவோடு வாழ்வதற்கு உதவும் வகையில் முதன் முதலாக போக்குவரத்து சபையின் அக்கரைப் பற்று டிப்போவில் தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம் செய்வதையிட்டு மிகவும் சந்தோசப்படுகின்றேன் எனக் கூறினார்.

அக்கரைப்பற்று டிப்போ முகாமையாளர் திரு. பாலசுப்பிரமணியம் உரையாற்றும் பொழுது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை பிராந்தியமாகப் பிரிக்கப்பட்டதும் முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்ட டிப்போ இதுவாகும் ஆனால் இதுவே இந்தப் பிராந்தியத்தில் பாதிக்கப்பட்டுள்ளதுமாகும். பெரியோர்களினால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டதும், அவர்களை இங்குள்ள தொழிற்சங்கங்கள் தட்டிக் கேட்காமல் விட்டதுமே இதற்குக் காரணமாயின் எட்டு பஸ்வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டும், இருபத்திரண்டு மின்கலன்கள் வழிப்பறிக்கப்பட்டும், ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட தொகைப்பணம் இனந்தெரியாதோரினால் கொள்ளையடிக்கப்பட்டிருந்த வேளையில் மத்திய போக்குவரத்துச் சபையினால் கிழக்குப்பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு பல உதவிகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அவற்றிலிருந்து அக்கரைப்பற்று டிப்போவுக்கு எதுவித உதவியும் செய்யப்படாததை எந்தஒரு தொழிற் சங்கங்களும் தட்டிக் கேட்கவில்லை. ஆகவே இக்காலகட்டத்தை நோக்கும்போது அநியாயங்களைத் தட்டிக்கேட்டு, உரிமைகளை வென்றெடுக்க, உண்மையான இலட்சியம் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தொழிலாளர் சங்கம் அமைப்பதற்கு அனைத்து ஊழியர்களும் பேதமின்றி முன்வந்தமைக்காக சகல ஊழியர்களுக்கும் எனது மனங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

மேற்படி தொழிற்சங்கத்திற்கு பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு எஸ். சுந்தரலிங்கம் (காசாளர்) உதவித் தலைவராக திரு. ந. சபாநாயகம் (பொறியியல் வினைஞர்) இணைச் செயலாளராக திரு. வி. கைலாசபிள்ளை (சாலைப் பரிசோதகர்) ஜனாப் எ. பி. எம் எ. காதர் ஆகியோரும் பொருளாளராக திரு. சே. கோபாலசிங்கம் (மின்கலப் பொருத்துனர்) செயற்குழு உறுப்பினர்களாக திரு. ஈ. ஈஸ்வரன், ஜனாப் நஸீர் ஆகியோர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

(46)

# வீடமைப்புக் கடன் பெறுவதற்கு விண்ணப்பப் படிவங்கள்

(சுண்டிக்குளி)

கடந்த ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் வீடமைப்புக் கடன் பெறுவதற்காக ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்திற்கூடாக விண்ணப்பம் கையளித்திருந்தும் இது வரையில் வீடமைப்புக் கடனை பெறாத ஐக்கிய நாணய சங்க அங்கத்தவர்கள் மீண்டும் இம்மாதம் 7ஆம்திகதி முதல் 23 வரை தங்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றும் யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிநிதிகளான வீட உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்ப படிவங்களை பெற்

# பயிற்றப்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள்

(சுண்டுக்குளி)

'யுனிசெப்'' ஸ்தாபன நிதியுதவியுடன் யாழ். மாநகர சபை மூலம் பயிற்றுவிக்கப்பட்ட, பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு இம் மாதம் 13ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. மேற்படி விழாவுக்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. பாலசிங்கம் தலைமை தாங்குகின்றார்.

இவ் விழாவுக்கு நகர வீடமைப்பு பிரிவு தலைமைக் காரியாலயத்தில் சிரேஷ்ட முகாமையாளராகக் கடமையாற்றும் திரு· ஐ .ஏ. ஹமீத் அவர்களும், யுனிசெப் திட்டமிடல் அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. குசைன் அவர்களும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்கின்றார்கள்.

யாழ். மாநகர எல்லைப் பகுதிக்குள் அமைந்துள்ள மாநகர சனமூக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களால் நடாத்தப் பெறும் பாலர் பாடசாலைகளில் ஆசிரியைகளாக கடமையாற்றும், பயிற்றுவிக்கப்படாத ஆசிரியைகளுக்கு மூன்றுமாத கால விசேட பயிற்சி அளிக்கும் நோக்குடன், இப் பயிற்சி நெறி இவ்வருடம் தை மாதம் முதல் பங்குனி மாதம் வரை ''யுனிசெவ்'' ஸ்தாபன நிதி உதவி மூலம் நடாத்தப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

பயிற்சி அறிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 43 பேரில் 30பேர் இப் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார்கள்.

(61)

**தர்மபுரம்...**

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

களின் மக்கள்முன்னணிதென் மராட்சி அரசியல் பொறுப்பாளர்பாப்பா பேசும் போது இந்திய அரசால் எமது ஆயுதங்களை நேருக்கு நேர் மோதி பெற்றுக் கொள்ள முடியாத தருணத்தில் எமது இளைஞர்களை அற்பசொற்ப ஆசைகளுக்கு உட்படுத்தி தனது சதிவலைக்குள் வீழ்த்தி தமிழ் தேசிய இராணுவம் என்ற போர்வையில்தமிழ்மக்களிற்கு எதிராக சதித்திட்டங்களை தீட்ட பாவித்தது. இந்த இளைஞர்களுக்கு நாம் பல முறைஅறிவித்தல்கள் கொடுத்தும் இவர்கள் தமது எதிர்காலத்தையே பாழாக்கி கொண்டுள்ளனர் என்றார்

மேலும் இக்கூட்டத்தில் சாவகச்சேரிநகரசபை ஆணையாளர் உட்பட பல உயர்



# பித்தனுக்குப் பொன்னாடை

காத்தான்குடியில் கடந்த வாரம் நடந்த நோன்புப் பெருநாள் கொண்டாட்டத்தில் கிழக்கிலங்கையின் முதல் முஸ்லிம் சிறுகதை எழுத்தாளரான திரு. கே. கே. ஷா(பித்தன்)வுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் பொன்னாடை போர்த்திப் பொற்கிளி வழங்கியபோது எடுத்த படம் இது.

# வலிகாமம் ஊர்திக்கு முதலிடம், 5 பேருக்கு பரிசு

மேதினத்தன்று தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள முன்னணியினரால் ஒழுங்கு செய்யப்பெற்ற மாபெரும் பவனி ஊர்த்தி ஊர்வலத்தில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய ஊர்திகளுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் இன்று வழங்கப்படும்.

ஊர்திகள் பற்றிய போட்டி முடிவுகள் வருமாறு:- முதலாம் இடத்தை வலிகாமம் மாணவர் அவை (SOLT) இரண்டாம் இடத்தை ஊர்காவற்றுறை (மலையகக் கட்சி) மூன்றாம் இடத்தை சுன்னாகம் (MP,CS) நான்காம் இடத்தை நாவாந்துறை கடற்றொழிலாளர் சங்கம், ஐந்தாம் இடத்தை துறையூர் கடற்றொழிலாளர் சங்கம் ஆகியன பெறவுள்ளன. இவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

ஊர்திப் பவனிப் போட்டியில் ஆறாம் இடத்தைப் பெற்றவர்கள் முதல் பத்தாம் இடத்தைப் பெற்றவர்கள் வரை சான்றிதழ்கள் வழங்கப்பெறும். ஆறாம் இடத்தை கோணாவளை செல்வநாயகபுரம் கிராம முன்னேற்றச் சங்கம், ஏழாம் இடத்தை அச்சுவேலி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம், எட்டாம் இடத்தை வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கம் யாழ்ப்பாணம், ஒன்பதாம் இடத்தை பாஷையூர் மக்கள், பத்தாம இடத்தை உரும்பிராய் மக்கள் ஆகயோர் பெறவுள்ளார்கள்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில்

# நிவாரணம் பெறுவோர் பெயர்கள் பார்வைக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரூபா 4000 கொடுப்பனவுகள் பெற தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெயர்ப் பட்டியல் உதவி அரச அதிபர் அலுவலகங்கள்தோறும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்குமாறு அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் புனர்வாழ்வு பிரிவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்நகர்

அதற்கான சந்தாப்பணங்க செயல்களினால் எமது சாலை

# யாழ். குடாநாட்டில் கோழி நோய் பரவுகிறது.

(கொழும்புத்துறை)

யாழ்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் தற்போதைய கொடூர வெய்யில் காரணமாக கோழிகளுக்கு ஒரு வகை தூங்கல் நோய் பீடித்துள்ளது.

தூக்கம் தொடங்கி மூன்று நாட்களில் இவை இறந்து விடுவதால் கோழி வளர்ப்போர் பெரிதும் கவலையடைந்துள்ளனர். கோழிக் குஞ்சுகள் இந் நோய் பீடித்து பன்னிரண்டு மணித்தியாலங்களுக்குள் இறந்து விடுகின்றன

இதே சமயம் அரசாங்க மிருக வைத்திய பிரிவும் சில இடங்களில் கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றுவதில் அசமந்தப் போக்காக நடந்துகொள்வதாகவும் கோழி வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்

நோய் பரவுவதையடுத்து சந்தைகளில் கோழிகளின்விற்பனையும் அதிகரித்து வருகின்றது.

## மந்திகை ஆஸ்பத்திரியில் உள்ள

# மனநோயாளர் வார்டுகளை இலங்கை வங்கி பராமரிக்கும்

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர் வைத்திய சாலை மனநோயாளர் பிரிவு வார்டுகளின் (ஆண்கள் பெண்கள் பகுதி) பராமரிப்பு நடவடிக்கைகளை பருத்தித்துறை இலங்கை வங்கி பொறுப்பேற்றதையடுத்து இந்த வாட்டுகளின் கூரைகள் சுமார் 35,000 ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்படவுள்ளது.

கூரைகள் பழுதடைந்திருப்பதினால் மழை நேரங்களில் இந்த நோயாளர்கள் மிகுந்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். அத்துடன் கூரைகள் அபாயத்தை ஏற்படுத்தக் கூடியனவாகவும் இருக்கின்றது.

இதனையடுத்தே பருத்தித்துறை இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் வைத்தியசாலையின் மன நோயாளர் பிரிவுகளின் கூரைகளைத் திருத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இன்னும் சில நாட்களில் இவ் வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பராபரிப்பதை பருத்தித்துறை இலங்கை வங்கி பொறுப்பேற்ற வைபவத்தின்போது இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி சம்பிரதாய பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இவ் வார்டுகளின் கூரை திருத்த வேலைகள் முடிவடைந்தும் இன்னும் சில வேலைகள் இவ் வார்டுகளில் மேற் கொள்ளப்படுமென்றும் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர். திரு. எஸ். மகாலிங்கம் தெரிவித்தார். (25)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டுக் மே மாதம் 05 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வீதிகளில் போட்டும் போக்குவரத்துக்கு இடையூறாக நடந்துகொள்கின்றனர்.

பொதுமக்களில் சிலரும் தமது வீட்டுக்கான கட்டடப் பொருட்களான மணல், கல் என்பவற்றை வீதியோரத்தில் பறித்து பல நாட்களாக அப்புறப்படுத்தாமல் விட்டுள்ளனர்.

எனவே இவர்கள் இவ்வாறான கருமங்களை இனிமேலும் மேற்கொள்ளாது வீதி போக்குவரத்து தங்குதடையின்றி செயற்பட உதவ வேண்டும்.

இவ்வாறு நடந்து கொள்ளாத கராஜ் உரிமையாளர், மரஆலை உரிமையாளர், பொதுமக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் மாநகர சபைக்கு ஏற்படும் எனவும் ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

### மகனையும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

உண்ணாவிரதம் அனுஷ்டித்து வரும் பெண்மணி, தனது மகனையும், மருமகனையும் விடுதலை செய்யவேண்டும் என்று சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளிடம் கேட்டபோதெல்லாம் விடுதலை செய்வோம் என்று இராணுவ அதிகாரிகளால் கூறப்பட்டு வந்ததாம்.

கடந்த வாரம், இவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டதையடுத்து, வஸ்தியாம்பிள்ளை திரேசம்மா என்ற பெண்மணி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

தனது வீட்டில் உண்ணாவிரதமிருந்து வரும் இவரை ஐந்து நாட்களின் பின்பே மற்றவர்கள் கண்டுகொண்டனர்.

தற்போது இவர் மயக்க நிலையில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

இவருக்கு ஒரு மகள் உண்டு என்றும் இந்த மகளின் கணவரே கைது செய்யப்பட்ட அப் பெண்ணின் மருமகன் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

களை பதிவு செய்து கொள்ள வேண்டுமென யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (61)

### கணவன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையில் தங்கியிருந்த சமயம் கோமளவள்ளி இன்னொருவரைப் போலிப் பாஸ்போட் விஸாவுடன் கனடாவுக்குக் கூட்டிச் சென்று திரும்பியதாக விசாரணைகளின்போது தெரியவந்தது.

தெமட்டக்கொடையைச் சேர்ந்த காமினி என்பவர் இவர்களுக்கு போலியான பாஸ்போட்டுகளை வழங்கி வந்தார். சம்பவதினத்தன்று போலிபாஸ்போட்டில் கனடா செல்வதற்காக கோமளவள்ளியின் சகோதரி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்துள்ளார். இவர் ஞாயிற்றுக்கிழமை கனடா பயணமாக இருந்தார்.

சம்பவ தினத்தன்று தம்பதிகள் ஆட்டோ ஒன்றில் போலி விஸாக்களுடன் தெமட்டக்கொடைக்குச்சென்றனர்

இரு சடலங்களையும் பொலிஸார் தேடியபோது கோமளவள்ளி அணிந்திருந்த நகையும், ரொக்கப் பணமும். கணவர் அணிந்திருந்த மோதிரமும் களவாடப்படாமல் அப்படியே இருந்தன. போலி விஸாக்களைக் கொண்டஉறை மாத்திரம் காணாமல் போய்விட்டது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மூவர் இக் கொலையைச் செய்திருக்கலாமென்றும், இவர்களை ஏற்றிச் சென்ற ஒட்டோவையும் பொலிஸார் தேடுகின்றனர்.

தம்பதிகள் சுமார் 100 தமிழ் இளைஞர்களைக் கனடாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும், கனடாவுக்கு அனுப்புவதற்கு ரூபா 100,000 ஒவ்வொருவரிடமும் அறவிட்டுள்ளார்கள்.

இக் கூட்டம் சாவகச்சேரி பிரதேச பெறுப்பாளர் கந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது குறிப்பிடத் தக்கதாகும் (லோ)

### விஞ்ஞானபீட..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

5-ம் திகதி நடைபெற விருந்த பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டு இம்மாதம் 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. இது சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரும் பரீட்சைக்கு 8-ம் திகதி தவறாது சமூகமளிக்கும்படி வேண்டப் படுகிறார்கள்.

### இனப்பிரச்சினை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் பொருளாதார விருத்திக்குத் தொடர்ந்தும் ஜப்பான் உதவியளித்து வருமென்றும் கூறிய பிரதமர் கைபூ ஜனசக்தித் திட்டம் பற்றி விரிவாக ஆராய்ந்து அதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் கூறினார்.

நேற்று முன் தினம் ஜனாதிபதி பிரேமதாசாவும், ஜப்பான் பிரதமர் கைபூவும் சந்தித்து இரண்டு மணிநேரம் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இலங்கைக்கான ஜப்பான் உதவி பற்றியும் தென்னாசிய அரசியல் சூழ்நிலை பற்றியும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

### இந்திய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா குறிப்பிட்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளரும், ராஜாங்க தொழில் அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி இந்திய வம்சாவளியினர் பற்றி இலங்கை இந்தியாவுடன் பேசவேண்டும் என்றார்

தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தமிழரை இந்தியாவுக்கு அனுப்ப இலங்கை அரசு எடுக்கும் எந்த முயற்சிகளையும் ரெலோ எதிர்க்கும் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது

வித தீங்குகளும் இல்லை என வட மாகாண ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவரும் யாழ் செஞ்சிலுவைச் சங்க உத்தியோகஸ்தருமான ச.சிவானந்தராசா தெவிரிக்கிறார். (லோ)

### கோட்டை...

1 ஆம் பக்கத்தொடர்ச்சி

தூரப்பயணம் செய்யும் போது இவ்வாறு நகைகளை அணிந்து செல்ல வேண்டாம் எனவும் பணத்தை பொக்கற்றுகளில் வைக்க வேண்டாம் எனவும் புகையிரதப் பகுதியினர் எச்சரித்தும் பயணிகள் ஒத்துழைப்புத் தருவதில்லை என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (62)

காணப்பட்டால் பொது மக்கள் ஆட்சேபனை தெரிவிக்க முடியும்.

ஒருவாரம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட பின்புதான் தகுதியானவர்கள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்படும். (37)

### சனிக்கிழமைகளில்

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாடிக்கையாளர்கள் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் இந்த நேரங்களில் தமது வெளிநாட்டு பணமாற்றம் உட்பட சகல கருமங்களையும் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான

O/L

பகல் முழுநேர வகுப்புகள்

DAY CLASSES

ஆரம்பம்

9-5-90 காலை 8-30 மணி

(B/612)